Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ ரா ம் கோ
MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 28 (29.07.2003) செவ்வாயக்கிழமை இதழ்: 299

# எமது யோசனைகளை ஏற்றால் அரசாங்கத்துடன் பேசத் தயார்!

## மட்டக்களப்பில் தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

**வடக்கு - கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக, அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனையில் பல குறைபாடுகள் இருக்கின்றபோதும் - அது குறித்து தாம் பரிசீலித்துவருவதாக, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

**நேற்றுமுன்தினம் - மட்டக்களப்பு மீனகம் பாசறையில் இடம்பெற்ற கப்டன் அன்பரசியின் 8 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

ஒருவார கால விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிற்குச் சென்றிருந்த தமிழ்ச்செல்வன் - மீனகம் பாசறையில் இடம்பெற்ற நிகழ்வில் -

தொடர்ந்து உரையாற்றுகையில்- அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகள் மக்களுடைய எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை. ஆனால், அதனை நிராகரிக்காது - அதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து, சில திருத்தங்களுடன் அரசாங்கத்திடம் மீளக்கையளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் தம்மால் மீளக்கையளிக்கப்படும் யோசனைகளை, அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாயின் இது குறித்துப் பேசததாம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். தென்னிலங்கையில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையினால், அங்கு என்ன மாற்றம் நிகழும் என்பதைத் தம்மால் அனுமானிக்க முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தமது பலத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வெடிமருந்து விநியோகமாம்

(கொழும்பு)

பிலிப்பைன்ஸ் முஸ்லிம் பிரிவினைவாதிகளுக்கு - விடுதலைப் புலிகள் சி.டி.எக்ஸ் பிளாஸ்டிக் வெடிமருந்துகளை விநியோகித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்குமுன்- கிழககு ஐரோப்பாவில், புலிகள் கொள்வனவு செய்த வெடிமருந்துகளுக்கும் பிலிப்பைன்ஸ் மின்டானொ மாநிலக் கிளர்ச்சியாளர்களிடம் காணப்படும் வெடி பொருட்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக, தடய ஆய்வுகள் கூறுவதாக அத்தகவல் மேலும் தெரிவிக்கிறது.

## பிரிட்டிஷ் அதிகாரி வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் அரசியல் நிலைமைகளை ஆராய்வதற்காக, பிரித்தானியாவிலிருந்து உயர் அதிகாரி ஒருவர் நாளையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்.வரும் மேற்படி அதிகாரி- யாழ்.செயலகத்தில் அரச உயர் அதிகாரிகளைச் சந்திப்பதுடன், குடாநாட்டு நிலைமைகள் பற்றியும் ஆராயவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்றும் வீதிச்சோதனை

(வடமராட்சி)

வடமராட்சி - பருத்தித்துறைப் பகுதியில் - நேற்று இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 4 மணியளவில் - நெல்லியடி, வல்லிபுரம் கோவிலடி, தம்பசிட்டி ஆகிய பகுதிகளில் வீதித்தடைகளைப் போட்டு சோதனையில் ஈடுபட்டனர்.

தம்பசிட்டி, வல்லிபுரம் கோவில் ஆகிய பகுதிகளில் வாகனங்களில் வந்த பயணிகளை இறக்கி அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்தனர்.

இதேவேளை - நேற்றுமாலை கோப்பாய் சந்திக்கு அண்மையிலும் - படையினரும், பொலிஸாரும் வீதித்தடைகளைப் போட்டு, இதேபோன்ற சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (09)

## கண்காணிப்புக்குழு அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது

### இதன்பின்பே நடவடிக்கை என்கிறார் ஒஸ்ரின்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் குரங்குப் பாஞ்சான் முகாம் குறித்து - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் இறுதி அறிக்கை கிடைத்ததும், அரசாங்கம் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேற்படி முகாமை அகற்றும்படி நாம் கோரிவருகிறோம். எனினும், அம் முகாம் அகற்றப்படாமல் உள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், இவ்விடயம் குறித்து இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் இவ்விடயம் குறித்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் இறுதி அறிக்கையை, அரசு தற்போது எதிர்பார்த்திருக்கிறது. இந்த அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசு தீர்மானித்துக்கொள்ளும் என்றும் ஒஸ்ரின் பெர்னாணடோ மேலும் தெரிவித்தார். (200)

## வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து ஐப்பானிய தூதர் - ரணில் ஆராய்வு

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று மாலை, பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, வட-கிழக்கில் அமுல் செய்யப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்தும், வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுச் செயற்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

இதே விடயங்கள் குறித்தும், வட-கிழக்கின் தற்போதைய நிலவரம் குறித்தும் விடுதலைப் புலிகளுடனும், ஜப்பானியத் தூதுவர் மிக மிகவிரைவில் பேச்சு நடத்தவுள்ளார். (200)

## யாழ்.தளபதி பொன்சேகா அமெரிக்கா பயணமானார்

### புதிய தளபதியாக குலதுங்க

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கான கட்டளைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, விடுமுறையில் அமெரிக்கா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் நாடு திரும்பும் வரையில் குடாநாட்டிலுள்ள படைகளுக்கான கட்டளையதிகாரியாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க பணியாற்றுவார்.

இவர் கடந்த வாரம் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்கா சென்றுள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா செப்ரெம்பரில் நாடு திரும்புவார் எனக் கூறப்பட்ட போதிலும், அவர் நீண்டகாலம் வெளிநாட்டில் தங்கியிருப்பார் என வேறொரு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழர் விளையாட்டு விழாவில் 10 ஆயிரம் பேர் பங்கேற்றனர்!

லண்டன் பிறம்பிளி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 8 ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். காலை 9 மணியளவில், தமிழ்தாய் வணக்கத்துடன் அனைத்துக் குழுக்களின் கொடிகளும் எற்றப்பட்டு போட்டிகள் ஆரம்பமாகின. கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டி, நீச்சல் போட்டிகள் இடம்பெற்றன.

கிரிக்கெட் போட்டியில் - நடேஸ்வராக் கல்லூரி, சென். கென்றியரசர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம், கொழும்பு விவேகானந்தா கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, விக்ரோரியா கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, சம்பத்தரிசியார் கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி, மகாஜன கல்லூரி, வல்வை சிதம்பரா கல்லூரி, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி. ஆகிய அணிகள் மோதியிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)




## ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரிமலைக்கு பெருமளவு மக்கள்

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் இராணுவத்தினருடைய பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியில் ஆடி அமாவாசை தீர்த்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பெருமளவான மக்கள் கீரிமலைக்கு சென்று, தமது பிதிர்க்கடன்களை நேற்று நிறைவேற்றினர்.

கீரிமலைக்கு மக்களை ஏற்றிச் சென்ற ஒவ்வொரு பஸ்ஸிலும் பாதுகாப்புக்காகப் படையினர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

EXPOAIR your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)

எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்வி, பொது அறிவுப் போட்டி முடிவுகள்!

வலிகாமம் வலய பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமூகக்கல்வி, பொது அறிவுப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டியில், முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

### தரம் - 6, 7

**பிரிவு - 1**

தே.பிரதீப்ராஜ்குமார் (மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை), ஆ.ஸ்ஜெரோ டேமிராஜ் (மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை), கா.தர்மசுகி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), கோ.சபிதரன் (உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்), ஜெ.சயந்தா (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

**பிரிவு - 2**

ம.பிரேந்திரா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ஆ.ரூபனா (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), ம.காத்தாயினி (இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்), அ.அன்ரன் தனேஸ் (மாதகல் சென். யோசெப் மகா வித்தியாலயம்), சு.சுரேஷ் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

**பிரிவு - 3**

மு.சங்கீதா (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), செ.தயாளன் (மூளாய் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), ஆ.அன்ரன் ஜெஸ்லின் (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), இ.பகீரதன் (வட்டு. இந்துக்கல்லூரி), கா.மயூரிக்கா (இணுவில் இந்துக் கல்லூரி).

**பிரிவு - 4**

சி.மாதுமை (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), க.கபீர்த்தனா (யூனியன் கல்லூரி), த.முரளிவாசன் (யாழ்ப்பாணக் கல்லூரி), சி.பிரணவன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), நா.சுதர்சன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

### தரம் - 8, 9

**பிரிவு - 1**

நா.சுவேந்தன் (கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), ர.சிவாகரன் (வீமன்காமம் மகா வித்தியாலயம்), ம.ஜனிஸ்ரன் (உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), சே.தாரணி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), ந.நவமணி உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்).

**பிரிவு - 2**

மு.சிந்துஜா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), சி.கீர்த்திகாயினி (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ச.சுகிர்தன் (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), மா.கவிதா (தாவடி இ.த.க. பாடசாலை), க.கார்த்திகேயன் (சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்).

**பிரிவு - 3**

ச.சிவரூபன் (வட்டு. இந்துக் கல்லூரி), சீ.துஷாந்தி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), செ.செந்தூரன் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), அ.சர்மிளா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ந.சாஹினி (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 4**

க.வைஷ்ணா (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சா.மயிந்தன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), ம.மகிலன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), பா.லோகதுர்க்காயினி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

### தரம் - 10, 11

**பிரிவு - 1**

ந.காயத்திரி (சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்), க.மங்களமூர்த்தி அராலி சரஸ்வதி வித்தியாலயம்), க.அனுசியா (சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்), ஸ்ரீ.விதுஜன் (கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்), தே.ரஜிதா (கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்).

**பிரிவு - 2**

ப.அஜித் (தாவடி இ.த.க.பாடசாலை), கு.ஹிந்துஷா (மாதகல் சென். ஜோசெப் மகா வித்தியாலயம்), ந.சுகதீபன் (உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), த.ஹரிப்பிரசாத் (மாதகல் சென்.ஜோசெப் மகா வித்தியாலயம்), தி.பாஸ்கரன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்).

**பிரிவு - 3**

பொ.தர்சினி (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), அ.கோகுலரமணன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), க.தர்சினி (வட்டு. இந்துக் கல்லூரி), ந.கௌதமன் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), த.றதிகரன் (இளவாலை புனித.ஹென்றியரசர் கல்லூரி).

**பிரிவு - 4**

பா.அஜந்தன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), க.தினேத் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), நா.மகிந்தகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி), ந.ட்ர்சிலி (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), பு.தேவரஞ்சனா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்),

### தரம் - 13, 14

**பிரிவு - 2**

த.தவரஞ்சினி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), க.நிஷாந்தினி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), மா. கயல்விழி (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), கோ.கோகுலப்பிரியா (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), ஜெ.அடயூபன் (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்).

**பிரிவு - 3**

வ.கிருஷ்ணராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), நா.சிவதர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), அ.கோகுலரஞ்சன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), கு.பாலகுமாரி (இணுவில் இந்துக் கல்லூரி), இ.சிந்துஜா (இணுவில் இந்துக் கல்லூரி),

**பிரிவு - 4**

ம.திருவரங்கன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), பி.துஷ்யந்தன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), இ.ஜனார்த்தனசர்மா (கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி), த. சாரங்கன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), க.கஜலஷ்மி (இணுவில் மத்தியகல்லூரி) (101)

# தாயக வலைப்பந்தாட்ட அணி லண்டனில் வெற்றியீட்டியது!

(யாழ்ப்பாணம்)

லண்டனில் நடைபெற்ற எட்டாவது தமிழர் விளையாட்டு விழாவில் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், தாயக அணி வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

லண்டனில் உள்ள 'நோர்மன் பாக்' விளையாட்டரங்கில், மேற்படி இறுதிப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் லண்டனிலுள்ள சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் அணியுடன், தமிழர் தாயக அணி மோதியது. இதன்போது - 12 இற்கு 3 என்ற அடிப்படையில் தமிழர் தாயக அணி வெற்றிபெற்றது.

# காஸ் சிலிண்டர் வெடித்ததில் இளம் பெண் பரிதாப மரணம்!

## காப்பாற்ற முற்பட்ட கணவனும் படுகாயம்

காஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு, அது வெடித்ததில், இளம் குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன், அவரது கணவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில், யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி, மணிக்கூட்டு வீதியில் வசித்துவரும் வசீகரன் நிரூஜா (வயது 18) என்ற பெண்ணே படுகாயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின், நேற்றைய தினம் உயிரிழந்தவராவார்.

இப்பெண்ணினது கணவரான கருணாகரன் வசீகரன் (வயது 23) தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினமன்று - புதிதாக வாங்கிய காஸ் சிலிண்டரில் சமைப்பதற்காக, அடுப்பினை இயக்கியபோது - அது எரியாததால், தீப்பெட்டி மூலம் பற்றவைக்க முனைந்தபோது, திடீரென காஸ் சிலிண்டர் தீப்பற்றிக்கொண்டது. தீப்பிடித்து எரிந்து, உயிருக்கு போராடிய மனைவியைக் காப்பாற்ற முனைந்த கணவனும் தீக்காயங்களுக்கு இலக்கானார்.

இவர்கள் இருவரையும் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று சிகிச்சையளித்தபோதும், காயமுற்ற பெண் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்தார். இவர்களின் எட்டு மாதக் கைக்குழந்தை சமையலறைக்கு வெளியே இருந்ததால், எவ்வித காயமுமின்றி உயிர் தப்பியதாகத் தெரியவருகிறது.(ரா,111)

# விமான நிலைய அதிகாரிகளுடன் அமைச்சர் எஸ்.பி.வாக்குவாதம்!

சமுர்த்தி, விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

சிங்கப்பூருக்குச் செல்வதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்த எஸ்.பி.திஸநாயக்கவுக்கும், அவருடன் இணைந்து சென்ற குழுவினருக்கும் - மிக முக்கிய பிரமுகர்கள் செல்லும் வழியால் உள்ளே செல்ல அனுமதிப்பதற்கு கட்டுநாயக்க விமான அதிகாரிகள் மறுத்ததாலேயே இந்த வாக்குவாதம் எழுந்தது.

அமைச்சரையும், அவரின் மனைவியையும் மட்டுமே தாம் அனுமதிக்க முடியுமெனவும், அமைசர் குழுவினரில் இருந்த ரெலிகொம் தலைவர் திலங்க சுமதிபால, சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜெயந்த சுமரத்ன ஆகியோரைத் தாம் அனுமதிக்க முடியாது எனவும், கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

அமைச்சரையும் அமைச்சரின் மனைவியையும் மாத்திரமே மிக முக்கியஸ்தர் பயணம் செய்யும் வழியால் அனுமதிக்க, தமக்கு அதிகாரம் இருப்பதாக விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

அதிகாரிகளின் கூற்றுக்களை ஏற்றுக் கொள்ளாத அமைச்சர், அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து மிக முக்கியஸ்தர் செல்லும் வழியால் தமது குழுவினரையும் பலவந்தமாக அமைச்சர் அழைத்துச் சென்றதாகத் தெரியவருகின்றது.

### மாணவர் ஒன்றிய பொதுக்கூட்டம்

இலங்கை உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியப் பொதுக்கூட்டம், நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் தலைவர் லீ.ஜெயதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த நேரத்திற்கு அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### கிரிக்கெட் வீரர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட நிலை கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக, எதிர்வரும் 2 ஆம் திகதி தம்புள்ள செல்லவுள்ள 19 வயதிற்குட்பட்ட வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு -

பி.லவேந்திரா (அணித் தலைவர்), வி.ரஜீவ்குமார் (உபதலைவர்), ஆர். கிருஷ்ணராஜா, சி.அகிலன், கே.றொகான், எஸ்.குணதாஸ், எஸ். உமாநாத், ஏ.ஜசிந்தன், ரீ.கஜேந்திரன், வி.மணிவண்ணன், கே.ராஜாதித்தன், ரி.பிரகாஷ், ஏ.துஷ்யந்தன், ஆர்.வினோதன், ஆர்.வைகுந்தன்.

இவர்களை இன்று மாலை 4 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு சமுகமளிக்கும்படி, கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மண்ணியல் நிபுணர்கள் வடமராட்சியில் ஆய்வு!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்.வந்த சுரங்கத்திணைக்களத்தின் மண்ணியல் நிபுணர்கள் - வடமராட்சி, நாகர்கோயில் பகுதிக்கு நேரடியாகச் சென்று மண்மாதிரிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

குடாநாட்டின் கட்டடத் தேவைக்கான மணல் மண்ணை அகழ்வது தொடர்பாகவே இவர்கள் ஆராய்ந்துள்ளனர். இது தொடர்பான அறிக்கையை இவர்கள் கொழும்பு சென்று மிகவிரைவில் வெளியிடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இன்று காலை 10 மணிக்கு, யாழ்.செயலகத்தில் அரச உயர் உயரதிகாரிகள் மற்றும் கட்டடத் திணைக்களத்தினருடனும் அவர்கள் சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளனர்.

மிக நீண்டகாலமாக, குடாநாட்டு மக்கள் மற்றும் கட்டடத் திணைக்களத்தினர் மணல் மண் அகழ்வதில் பலவிதமான இடர்களை எதிர்நோக்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சார ஊழியர் போராட்டத்தினால் நாளை மின்விநியோகம் தடைப்படும்?

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் நடத்தவிருக்கும் வேலைநிறுத்தத்தால், நாடு பூராவும் மின்சார விநியோகம் தடைப்படும் என்று, தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதன்படி நாளை 30 ஆம் திகதி பகல் 12 மணி தொடக்கம் நாளை மறுதினம் 31 ஆம் திகதி பகல் 12 மணிவரை மின்சார விநியோகம் இருக்கமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மின்சார சபை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமெனக்கோரியே, இவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

### இலவச வைத்திய முகாம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய ஆசிய மருத்துவ வைத்திய சங்கம் எதிர்வரும் 2 ஆம், 3 ஆம் திகதிகளில், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவுள்ளதென, யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர் அறிவித்துள்ளனர்.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30, 9.30 ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)

இயக்கம்: விக்ரமன்



**திறைஞ்சனஸ்** சங்கானை

விக்ரம், பிரியங்கா, விவேக் நடித்த

காதல் சடுகுடு

(சி-1138)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

THE MUMMY

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)


# போர்நிறுத்த கண்காணிப்புக் குழு மற்றுமோர் கடிதம் அனுப்பியது!

கிண்ணியா - குரங்குப்பாஞ்சான் குளத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள முகாம் தொடர்பாக, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, விடுதலைப் புலிகளுக்கு மற்றுமொரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

அவர்களின் பதிலைப் பொறுத்தே, அடுத்தகட்ட நடவடிக்கை அமையும் என, கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும், நோர்வே சென்றுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைவர், இதுகுறித்து நோர்வே அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார், எனக் கூறப்படுகிறது.

### ஆங்கிலப் போட்டி

யாழ்.வலய ஆங்கில தின தனியாள் வாய்மூல நிகழ்ச்சிகளும், சொல்வதெழுதலும் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர்மடம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

குழு நிகழ்ச்சிகளில், பங்குபற்றும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# மருந்துகள் பற்றாக்குறையால் நெடுந்தீவு நோயாளிகள் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்திய சாலையில், ஏற்பு மருந்துகளோ ஏனைய மருந்துகளோ இன்மையால் நோயாளிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

கடந்த சில மாதங்களின் முன்னர் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால், பல இலட்சம் ரூபா செலவில் சூரியகலம் மூலம் இயங்கும் குளிரூட்டி வழங்கப்பட்டும், அதில்வைத்து பாவிக்கப்படும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (113)

# ஒகஸ்ட் மாத இறுதிக்குள் அடுத்த கட்டப் பேச்சுக்கள்!

## அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறுகிறார்



விடுதலைப் புலிகளுடனான - இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்கள், இன்னும் ஒரு சில வாரங்களில் மீண்டும் ஆரம்பமாகிவிடும் என்ற நம்பிக்கை, தமக்கிருப்பதாக, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செடக் நிறுவன ஏற்பாட்டில் நடைபெற்ற - "இடைநிறுத்தப்பட்ட சமாதானத்தை மீள ஆரம்பித்தல்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போதே, அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அரசும், விடுதலைப் புலிகளும் இன்னும் சில வாரங்களில் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் அறிகுறிகள் ஏற்பட்டுவருவதாகவும், அரசாங்கத்தின் முயற்சிகள் நம்பகத்தன்மையோடு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக திட்டவரைபை - விடுதலைப் புலிகள் மிக உன்னிப்பாகவும், ஆழமாகவும் பரிசீலித்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர் -

பெரும்பாலும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் புதிய கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

# நிரந்தரமான சமாதானத்திற்காக அனைவரும் உழைக்கவேண்டும்!

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் தற்போது நிலவும் சமாதானம், நிரந்தர சமாதானமாக மாறுவதற்கு அனைவரும் உழைக்கவேண்டும் என, மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் கேட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த இருபது வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின்போது, 45 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தற்போதைய அரசாங்கம் பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்திருந்ததுடன், அமைதியில்லாமல் மக்கள் பீதியுடன் வாழ்ந்தனர்.

எனினும், புதிய அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும், இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் மேலும் தெரிவித்தார்.

### புதிய கடவுச்சீட்டு அறிமுகம்

(கொழும்பு)

மாற்றங்கள் எதுவும் செய்யமுடியாத லேசர் முறையில் அமைக்கப்பட்ட புதிய கடவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல், இந்தப் புதிய கடவுச்சீட்டுக்கள் விநியோகத்துக்கு வருமென, குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வட - கிழக்கு ரயில் சேவையை புலிகளிடம் கொடுக்கத் திட்டமாம்!

## அரசை சாடுகிறார் தினேஷ் குணவர்த்தன

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ரயில்வே போக்குவரத்துச் சேவைகளை விடுதலைப் புலிகளிடம் முழுமையாக ஒப்படைப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக, பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே, அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ரயில் போக்குவரத்து அதிகாரசபைச சட்டமூலத்தின் கீழ், மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணிலுக்குப் பதிலாக மாற்றுத் தலைவரை உருவாக்கும் முயற்சியில் பொ.ஐ.முன்னணி!

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி பற்றிய பேச்சுக்கள் முடிவடையும் கட்டத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை சந்திப்பதற்கு பொ.ஐ.முன்னணி தீவிர முயற்சியை மேற்கொண்டுவருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.தே.முன்னணி அமைச்சரும், அவரது மகனும் அண்மையில் இது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை மிகவும் இரகசியமான முறையில் சந்தித்துப் பேசியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பியுடனான கூட்டணி இப்போதைக்குச் சாத்தியமற்றுப் போயிருப்பதால், தேசிய அரசை அமைக்கும போது, ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பதிலாக - ஒரு மாற்றுத் தலைவரை முதலில் உருவாக்குவதற்குக் குறிப்பிட்ட அமைச்சரைப் பயன்படுத்துவதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களும் முயன்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(க)

# சிகிச்சைக்கு வந்த இளம் பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்திய வைத்தியர்!

வைத்திய ஆலோசனை பெறவந்த 21 வயது பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய வைத்திய அதிகாரி ஒருவரை, நுவரெலியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

33 வயதான இந்த மருத்துவ அதிகாரி - நுவரெலியா நீதிவான் முனனிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

நுவரெலியாவைச் சேர்ந்த குறிப்பிட்ட பெண் - இராணுவச் சிப்பாய் ஒருவரால் கர்ப்பம் தரித்து, அக்கர்ப்பத்தைக் கலைப்பதற்காக பதுளை தனியார் வைத்திய அதிகாரியிடம் சென்றபோது, வைத்திய அதிகாரியும், சத்திரசிகிச்சை மேற்கொள்வதாகக் கூறி, சில தினங்கள் வார்ட்டிலிருக்கவேண்டுமெனக் கூறி, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணுக்குத் துணையாக வந்த அவரது சகோதரி, வீடு திரும்பியவுடன், தனியாக இருந்த இளம்பெண் மீது, பலமுறை பாலியல் வல்லுறவுகளை வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

இப்பெண்ணைப் பண்டாரவளைக்கு- கருக்கலைப்புச் செய்வதற்கு என அழைத்துச் சென்று, அங்கும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

வைத்திய அதிகாரியால், நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அந்தப் பெண் - அங்கிருந்து தப்பிச்சென்று, நுவரெலியா பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட வைத்திய அதிகாரியை, நுவரெலியா பொலிஸார் வைத்தியசாலையில் வைத்துக் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இந்த வைத்திய அதிகாரி - தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### விசேட பயிற்சிகளைப் பெறுவதற்காக

# பொலிஸ் உயரதிகாரிகள் ரஷ்யாவுக்குப் பயணம்!

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயதிஸ்ஸ ஹேரத் தலைமையிலான - ஏழு பேர்கொண்ட பொலிஸ் உயரதிகாரிகள் குழுவொன்று, குறுகியகால விசேட கற்கை நெறியொன்றுக்காக ரஷ்யாவுக்குச் சென்றுள்ளது.

இவர்கள், ரஷ்யாவில் ஒருவார காலம் தங்கியிருந்து விசேட பயிற்சிகளைப் பெறவுள்ளதாக, பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொலிஸ் அதிகாரிகள் மொஸ்கோவிலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று, முக்கிய இடங்களில் பாதுகாப்பு, மனிதக் கடத்தல் நடவடிக்கைகள், கிரிமினல் குற்றச்செயல்கள், போக்குவரத்து, நவீன தொழில்நுட்பப் பயிற்சிகளைப் பற்றியும், இவை குறித்த புலன் விசாரணைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தவுள்ளனர்.

இந்தப் பொலிஸ் குழுவில், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் - பத்மசிறி லியனகே, பிரதாபசிங்க, பரணதால மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் - டி.ஏ.டி.பொன்சேகா, எச்.எம்.டி.ஹரத், ஏ.என்.எப். மெண்டிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

# ஆபாசப் படம் தயாரிப்போருக்கு கடும் தண்டனை வழங்கப்படும்!

ஆபாசத் திரைப்படங்கள், மற்றும் சஞ்சிகைகள் வெளியிடுவோருக்கும், விற்பனை செய்வோருக்கும் கடுந்தண்டனை வழங்குவதற்கான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை, தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை மேற்கொண்டு வருகின்றது.

தற்போதுள்ள சட்டதிட்டங்கள் போதுமானதாக இல்லாததாலேயே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திரா சில்வா தெரிவித்தார்.

தற்போதுள்ள சட்டதிட்டங்களின் பிரகாரம் - ஆபாசப்படங்களை விற்பனை செய்வோருக்கும், வெளியிடுவோருக்கும் தண்டனை வழங்கும் ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால், இந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாகப் பேராசிரியர் மேலும் கூறினார்.

இந்தச் சட்டங்களை மறுசீரமைப்பதற்காக ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# சமஷ்டி அரசியலமைப்பின் மூலம் ஆரோக்கியமான தீர்வை எட்டமுடியும்!

## சிரேஷ்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதன் மூலமே, இனநெருக்கடிக்கான ஆரோக்கியமான தீர்வொன்றை எட்டமுடியும் என்று, கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்திய சமஷ்டி அமைப்பு தொடர்பாகக் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இனநெருக்கடிக்குத் தீர்வுகாண, காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படாமையே, யுத்தம் உக்கிரமடைந்தமைக்குக் காரணமாகும்.

1947 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பின் 29 ஆம் சரத்து, சிறுபான்மையோருக்கான காப்பீடாக அமைந்தது. ஆனாலும், அந்த 29 ஆம் சரத்து பின்னர் வந்த குடியரசு அரசியல் யாப்பில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு, நாடாளுமன்ற அதிகாரங்களை மையப்படுத்தினாலும், அது ஜனாதிபதியினது அதிகாரத்திற்கு உட்பட்டதாகவே அமைந்திருக்கின்றது.

இந்த நிலையிலேதான் சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதில், நாடு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. சமஷ்டி என்பது - உள்ளக சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தவேண்டும். தமிழ்க் கட்சிகள்கூட, அதனை வலியுறுத்துகின்றன.

ஆனால், அவ்வாறானதொரு நிலைக்குத் தற்போது சாதகமான சூழ்நிலையில்லை என்பதுதான் உண்மை எனவும், அவர் மேலும் தெரிவித்தார். இந்தக் கருத்தரங்கிற்கு பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை தாங்கினார்.

### பிறெட்ஸ்கர் இலங்கை திரும்பினார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார். இதேவேளை - முன்னாள் நோர்வேத் தூதுவரும், நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகருமான- ஜோன் வெஸ்பேர்க் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு, நோர்வேக்குச் சென்றுள்ளார். நோர்வே சென்றுள்ள வெஸ்பேர்க் மூன்று வாரங்கள்- நோர்வேயில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் - ஹான்ஸ் பிரட்ஸ்கா இலஙகையில் தங்கியிருந்து பணிகளை மேற்கொள்ளவுள்ளார்.

# ஜயலத்தின் மகனை கைதுசெய்ய சட்டமா அதிபரிடம் ஆலோசனை!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள மிகப் பிரபல்யமான பெண்கள் பாடசாலையான பிறிஜெட் மகளிர் கொன்வென்ற் வெளிப்புறச் சுவரில் - தகாதவார்த்தைகளை எழுதியபோது, அதனைத் தட்டிக்கேட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கிய, அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனவின் மகனைக் கைதுசெய்வதற்கு, சட்டமா அதிபரின் ஆலோசனையை, கறுவாத்தோட்டப் பொலிஸார் நாடியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தில், சென்.பிறிஜெட்ஸ் கொன்வென்ற் வெளிப்புறச் சுவரில் - குறிப்பிட்ட பாடசாலை மாணவிகளைப் பற்றியும், அங்கு பணியாற்றும் ஆசிரியரைப் பற்றியும் கேவலமான வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு எழுதிக்கொண்டிருந்த அமைச்சரின் மகனும், அவரது நண்பர்களும் - எழுதுவதைத் தடுக்க முற்பட்ட பொலிஸாரைத் தாக்கிவிட்டு, அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டனர்.

இதையடுத்து, அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனவின் மகனைக் கைதுசெய்யும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள கறுவாத்தோட்டப் பொலிஸார், தற்போது கைதுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளைப்பெற்றுக்கொள்வதற்காக, சட்டமா அதிபரின் உதவியை நாடியுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட கறுவாத்தோட்ட பொலிஸ் அதிகாரி - அமைச்சரின் மகன் தனியார் பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கற்றுவருவதாகவும், அவரை விசாரணைக்காக பொலிஸ் நிலையம் வருமாறு அழைத்தபோது, இதுவரை அவர் சமுகமளிக்கத் தவறியதால், அவரைக் கைதுசெய்வது பற்றி ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில், தனது மகன் தேவையற்ற விதத்தில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜயலத் ஜெயவர்த்தன -

எவ்வாறாயினும் இச்சம்பவத்தில் தாக்கப்பட்டிருக்கும் பொலிஸ் கொன்ஸ்டபிளிடம் - பொலிஸ் மா அதிபரின் முன்னிலையில், தாம் பகிரங்க மன்னிப்புக்கோரவிருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவத்தில் தொடர்புடைய அமைச்சரின் மகன் தவிர்ந்த, ஏனையோரும் தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தககது.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**





## கன்னி

(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதம்)

நீங்கள் உங்கள் புகழை நிலை நிறுத்தப் பெரும் முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பதவி நிலைக்க இறைவனை நாடவேண்டும்.

உங்கள் விருப்பங்களுக்கு மாறாக இடமாறுதல்கள் கிடைதது மனத்துன்பங்கள் ஏற்படும். நீங்கள் பயிர்த்தொழில் செய்பவராயின், அளவான இலாபங்கள் மட்டும் உண்டு. கணிதம், கணினித்துறை மாணவர்கள் நன்கு கற்பார்கள். கவனத்தைக் கல்வியில் செலுத்தினால் மட்டும்தான் தேர்ச்சி பெறமுடியும். இல்லையெனில் வீண்விரயங்களைச் சந்திக்க நேரிடும்.

திருமணம், புதுமனை புகுதல் எனச் சுபச்செலவுகள், சுபகாரியங்கள் நடைபெறும். குடும்பப் பொருளாதார நிலைகள் ஆடி மாதம்வரை சிறப்பாக இருக்கும். கணவன் - மனைவி இருவரும் கருத்தொருமித்துப் பணிசெய்வீர்கள். சமுதாயத்தில் அந்தஸ்து பெருகும். செல்வப்பெருக்கும், சுகபோகங்களும் அமையும். இயல்பாகவே உங்களுக்கு இரக்ககுணம் உண்டு. உங்கள் பண்புகள் சிறந்து இருக்கும். நீங்கள் மாணவர்களாயின் உங்கள் கல்வி தடைப்பட வாய்ப்புக்கள் ஏற்படும். பொருளாதார் ஏற்ற இறக்கங்களைச் சந்திப்பீர்கள். தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் வருவாய் தடைப்பட்டு நிற்கும். உங்கள் பேச்சில் தெய்வீக மணம் கமழும். மற்றவர்கள் மேன்மை பெற, வாழ்வின் இலட்சியத்தை அடையவேண்டிய மோட்ச மார்க்கங்களைவிடாது உபதேசிப்பீர்கள்.

சிலர் பெண்களால் மிகவும் கவரப்படுவீர்கள். உங்களில் சிலர் நல்ல அழகான பணக்கார மனைவியை மணஞ்செய்து கொள்வீர்கள்.

உங்களில் சிலருக்கு அரசாங்கத்தின் கடைக்கண் பார்வை கிடைக்கும். சிலருக்கு அரசின் கைகள் கைதூக்கிவிடும் பணியைச்செய்யும்.

உங்களில் சிலருக்குச் சுயசம் பாத்தியம் ஏற்படும். நீங்கள் விடா முயற்சி மற்றும் தன்னம்பிக்கை உள்ளவராவீர்கள்.

பெண்களுக்கு இந்தக் குருபெயர்ச்சி நன்மையே தரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வீட்டிலுள்ள பெண்கள்- கணவரின் அன்பைப் பெறுவர். நகை, ஆடை வகைகள் ஓரளவு சேரும். நகைகளை விற்றுத் தொழில் துவங்குவது போன்றவற்றைத் தவிர்த்துவிடுவது நல்லது.

### ஆடி

உங்கள் தந்தையின் உடல் ஆரோக்கியம் கெடும் வாய்ப்புக்கள் உண்டு அல்லது அவர் பொருளாதாரரீதியில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கலாம்.

### ஆவணி

பெண் குழந்தைகளால் கவலை ஏற்படும். தாயாரின் உடல்நலம் கெடும். உங்கள் உடல் ஆரோக்கியத்தில் குறைபாடுகள் தோன்றும்.

### புரட்டாதி

உங்களுக்கு அரசினால் உதவிகள் கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் கிடைக்கும். வசதி வாய்ப்புக்கள் அதிகமாகும். அவசரக்காரர்கள் என்று பெயர்பெறுவீர்கள். ஆத்திரம் அளவிற்கு அதிகமாக வருவதைக் குறைக்காவிட்டால் பிரச்சினைதான். சகோதரர்களுக்குள் மனவேற்றுமை ஏற்பட வாய்ப்புக்கள் அநேகம் தோன்றவுள்ளன. சகோ தரர்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டாம்.

### ஐப்பசி

இது உங்கள் நேர்மை, நாணயத்திற்குச் சவாலான மாதம். வேணடாம் வேண்டாம் என்று ஒதுங்கிச் சென்றாலும், வேண்டாதவர்களின் தகாததொடர்புகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். வேண்டாம் இந்த அவலம். மனதைக் கட்டுப்படுத்தி, உங்கள் புலன்களுக்குக் காவலிட்டு விலகிவிடுங்கள். மதுப்பழக்கம் முதலானவை ஏற்படலாம். இதனால், உங்கள் துணைவிக்கு மனவேதனை மற்றும் நோய்நொடிகள் தோன்றும் வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். கண் தொடர்பான நோய்கள் தோன்றும். 03.10.2003 இற்குப் பின்னர் - நீங்கள் மிகமிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய காலம்.

### கார்த்திகை

உங்கள் வாக்கில் மிகமிகக் கடுமை தோன்றும். உங்கள் மனம் நொந்து யாரையும் தகாத வார்த்தைகளால் திட்டாதீர்கள். உங்கள் தந்தையாரின் உதவிகளை எதிர்பார்க்கமுடியாது. தந்தையாரின் அருகே இருந்து சேவைசெய்ய முடியாமல் போகலாம். உங்கள் தந்தையாரைவிட, நீங்கள் அதிக புகழ் பெறலாம். 23.11.2003 வரை உங்கள் மனைவியாருடன் கருத்து வேறுபாடுகள் தோன்றும். நீங்கள் சற்று விட்டுக்கொடுத்துச் சென்றுவிடுங்கள். 24.11.2003 முதல் இந்த நிலைமை சீர்பட்டுவிடும்.

### மார்கழி

உங்கள் வசதிகள் அதிகமாக அமையும். 09.01.2004 வரை இவ் வாய்ப்புக்கள் மிகப்பிரகாசமாக இருக்கும். தந்திரத்தில் நீங்கள் குள்ள நரியை மிஞ்சுவீர்கள். உங்கள் மனத்தின் ஆழத்தை யாராலும் அறியமுடியாது.

### தை

இலக்கியத்தில் உங்களுக்கு ஆர்வம் தோன்றும். விலையுயர்ந்த வாகனங்கள் வாங்கும் வாய்ப்புக்கள் ஏற்படும். உறவினர்களுடன் நல்ல உறவு நீடிக்கும்.

தந்தை வழி உறவுகள் உங்களுடன் நெருங்கியிருப்பார்கள். அன்புள்ள அன்னையின் உதவிகள் அதிகம் கிடைக்கும்.

உங்களில் சிலருக்கு வைத்தியத் துறையில் ஆர்வம் தோன்றும். ஆடை, அணிகலன்களை அணிவத்ல் ஆர்வம் மிக அதிகமாகத் தோன்றும். சிலருக்குப் பூர்வீகச்சொத்துக்கள் கிடைக்கும்.

ஆனால், நீங்கள் மற்றவர்களைக் குறைத்துப் பேசி, மற்றவர்களைத் துன்பப்படுத்துவீர்கள். தொழில் நுணுக்கங்களில் வல்லவராக இருப்பீர்கள்.

### மாசி

அரசியல் பகைகளை வெல்லும் மாதம். அரசின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும். மார்பில் கட்டிகள் தோன்றிப் படாதபாடுபடுத்தலாம். வழக்குகள் அனுகூலமாக நிறைவேறும். சிலருக்குக் கல்வியில் மந்தநிலை தோன்றும். பணப்பற்றாக்குறை தலைதூக்கும். தாயார், தாய்மாமன்மார் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். நரம்புத் தளர்ச்சி, உயர் இரத்த அழுத்தம் தோன்றலாம். இந்த நிலை உங்களுக்கு 15.02.2004 தொடங்கி 03.03.2004 வரை நீடித்துச் சீர்பெறும். விளைவு மருத்துவச் செலவு அதிகமாகும்.

### பங்குனி

உங்களுக்குத் தற்போது திருமண வயதாக இருந்து திருமணம் நிகழுமானால், அழகான போற்றுதலுக்குரிய குணங்களுடன் மனைவ' அமைவாள். உங்களுக்குக் கூட்டுத் தொழில்கள் ஒத்துவராது. உங்கள் மனைவியின் பெயரில் சொத்துக்கள் அமையும். உங்கள் மனைவியார் என்றும் இளமைத் தோற்றம் என்னும் பாக்கியம் பெற்றவர். உங்கள் புத்திரர்கள் நல்லவர்களாக அமைவார்கள்.

### சித்திரை

ஆயுதங்களைக் கையாளுவதில் எச்சரிக்கையுடன் இருங்கள். இந்த மாதத்தில், உங்களுக்குக் காயம்பட நிரம்ப வாய்ப்புக்கள் உண்டு. காய்ச்சல், கண்ணில் நோய்கள் தோன்றும். உஷ்ணம் தொடர்பான நோய்கள் தோன்றும்.

### வைகாசி

தந்தையாரின் உடல்நலம் பாதிகப்படும். உங்கள் மனம் உறுதிப்படும். அத்துடன், உயர் எண்ணங்கள் தோன்றும்.

### ஆனி

உங்களுக்குக் கௌரவப் பதவிகள் கிட்டும். இம்மாதம் வெற்றியான மாதம். அரசின் உதவிகள் கிடைக்கும். வருமானம் பெருகும். வாழ்வின் எல்லாச் சுகங்களையும் அனுபவிப்பீர்கள்.

(நாளை துலாராசி தொடரும்)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகரசபை சிறப்பு ஏற்பாடு!

நல்லூர் திருவிழாவினை முன்னிட்டு, யாழ்.மாநகர சபையினரால் சிறப்பு ஏற்பாடுகள் மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தற்போது நல்லூர் கோவில் வீதியிலுள்ள மணல் மண் அகற்றப்பட்டு, தொற்று நீக்கி மருந்து தெளிக்கப்பட்டு, புதிதாக மண் கொண்டுவரப்பட்டு பரவப்படுகின்றது. திருவிழாக் காலங்களில் பிரதிஷ்டை செய்வோர் ஒருவிதமான கிருமித் தாக்கத்துக்கு உள்ளாவதனாலேயே, இவ்வாறு- கோவில் வீதியிலுள்ள மணலை அகற்றி மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன், நல்லூர் கோவிலுக்கு செல்லும் ஆறு வீதிகள் மறிக்கப்பட்டு, அவ்விடத்தில் - பொலிஸாரும், தொண்டர்களும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கோவிலை அண்டிய பகுதியிலுள்ள வீடுகளில் வசிப்போருக்கு, இந்த வீதியால் சென்று வருவதற்காக விசேட பாஸ் வழங்கப்படவுள்ளது.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சந்திரிகாவுடன் ஹக்கீம் பேசுவார்!

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக, முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விளக்க இருப்பதாக - காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்கவே, இந்தச் சந்திப்பு அடுத்த சில தினங்களில இடம்பெற இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, சகல தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகசபை - ஒரு கட்டமைப்பாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பூரண ஆதரவு ஜனாதிபதியிடம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாலர் அபிவிருத்தி நிலையங்கள் சமுர்த்தி ஆணையாளரால் பதிவு!

(கொழும்பு)

நாடு முழுவதிலும் இயங்கி வரும பாலர் அபிவிருத்தி நிலையங்களைப் பதிவுசெய்து, அபிவிருத்தி செய்வதற்குச் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதன்கீழ் பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், பாலர் பாடசாலைகள் ஆகியன பதிவுசெயது கொள்ளமுடியும்.

இதில் பதிவுசெய்து கொள்வதன் மூலம் - அரச அங்கீகாரம், விசேட பயிற்சி வாய்ப்புக்கள், தரப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்படுவதுடன், தேவைகளை நிறைவு செய்தும் கொடுக்கப்படும்.

நிலையம் தொடர்பான சகல விபரங்களையும் எழுதி, சமுர்த்தி ஆணையாளர் நாயகம் - சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம், 4 ஆவது தளம், செத்சிரிபாய, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு ஒகஸ்ட் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : யூலியன் வினோஜ்
முகவரி : நல்லாயன் வீதி, இளவாலை.

ஏழாவது அகவையில்

பெயர் : செ.பிரிந்திக்கா
முகவரி: மல்லிகை, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------
முகவரி :-----------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
-----------------------------
பெற்றார் ஒப்பம்


# சம்பள நிலுவைகளை வழங்கக்கோரி மின்சாரசபை ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

2000ம் ஆண்டு முதல் தமக்கு வழங்கப்படாதுள்ள சம்பள நிலுவைகளை வழங்கும்படி கோரி - இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நாளை புதன்கிழமை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தமக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைகளில் 50 வீதத்தையாவது உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இதற்கு எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் சாதகமான பதிலைத் தராது விட்டால், நாடளாவிய ரீதியில் எமது போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## புத்தூர் சிவன்கோயில் மஹோற்வம்

(புத்தூர்)

புத்தூர் மேற்கு சிவன்கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

## நாயன்மார்கட்டு அம்பாள் ஆலய மஹோற்சவம

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 31ம் திகதி வியாழககிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

## என்.கே.பத்மநாதனின் திருவுருவப் படம் திரைநீக்கம்

நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதனின் திருவுருவப்படத் திரைநீக்கமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# திரை விமர்சனம்

## ஜஸ்



பெயருக்கேற்றாற்போல் பார்ப்பவர்களுக்குச் சன்னியை ஏற்படுத்தக்கூடிய, உப்புச்சப்பற்ற திரைப் படம். தன்னம்பிக்கை நிறைந்த - ஏனையவர், தயவின்றி வேலை தேடும் இளைஞன் அசோக். பணக்காரரான மௌலியைச் சந்திக்கிறான். சந்திப்பின் பின்னர் அவனுக்கு உதவியளிக்க மௌலி முன் வந்த போதிலும், பிடிவாதக்காரனான அசோக் - அதை நிராகரித்துவிட்டுப் போய்விடுகிறான். அசோக்கின் - இருதய நோயாளியான தாயின் நிலை மோசமடைந்தபோது, அவசர சிகிச்சையின் தேவையை வைத்தியர்கள் வலியுறுத்துகின்றனர்.

சிகிச்சைக்கு பல இலட்சம் ரூபா தேவையான நிலையில், வேறுவழியின்றி அசோக் - மௌலியிடமே செல்கிறான். அவரிடம் பணியில் சேர்ந்து, தாயின் சிகிச்சைக்கான பணத்தையும் பெற்றுக் கொள்கிறான். மௌலியின் வியாபார விருது ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, ஜேர்மன் செல்லும் அசோக் - அங்கு பிரியங்கா திரிவேதியைச் சந்திக்கின்றான். பெற்றோரின் அன்பை முழுமையாகப் பெறாத பெண் அவள்.

சிறுவயதில் தாயின் இழப்பு, தந்தையின் சதா வியாபார நடவடிக்கை, இதனால் தனித்து நிற்கிறாள் பிரியங்கா. அசோக்குடன் காதல் வயப்படும் பிரியங்கா - ஒரு சந்தர்ப்பத்தில் வரம்பை மீறிவிடுகின்றனர். பிரியங்கா கர்ப்பமாக இருப்பதை உணர்கிறாள். இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகின்றன. இறுதியில் விமானத்தில் பயணிக்கும்போது, தற்கொலை செய்ய முயல்கிறாள் பிரியங்கா. அதே விமானத்தில் விமானச் சிப்பந்தியாகப் பணிபுரிகிறான் அசோக். மீட்பு நடவடிக்கை, இருவரும் பின்னரும் சந்திக்கின்றனர். இதுவே கதை. நடிகர்கள் ஒருவரது நடிப்பும் எடுபடுவதாக இல்லை. விவேக்கும் சிரிப் பூட்டவில்லை. பாடல்கள் மனதில் நிற்பதாக அமையவில்லை. ரகுராஜ்ஜின் இயக்கம் குறிப்பிடும்படியாக இல்லை. மொத்தத்தில் உருகிய ஐஸ்.

# பஞ்சுச் சிதறல்

பல்சுவை அரங்கு

## பெரியோர் வழிகாட்டலின்றி



பிரிட்டனில் பாடசாலை மாணவர்களிடையே இன்ரநெற் பாவனை தொடர்பாக எடுக்கப்பட்ட ஓர் கருத்துக் கணிப்பில், அவர்களில் அரைப்பங்கினர் தாம் ஒருபோதும் பெரியோர்களின் மேற்பார்வையின்கீழ், இன்ரநெற் தொடர்புகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளனர். 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடையிலான 37,150 மாணவ, மாணவியர் ஆய்வுக்கு எடுக்கப்பட்டனர். இவர்களில் 8 சதவீதத்துக்கும் குறைவானவர்கள் - தாம் ஒருபோதுமே இன்ரநெற்றைக் கையாளவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வின் முடிவுகள், அதிர்ச்சி தருவதாகவுள்ளது என, ஆய்வுகளை மேற்கொண்ட ஒருவரான கலாநிதி டேவிட் ரொஜிஸ் குறிப்பிடுகின்றார்.

பெற்றோர்கள் இந்த நிலைகுறித்துக் கவனமாக இருக்கவேண்டும். இன்ரநெற் மூலம் தேவையற்ற தகவல்களினால் பிள்ளைகளும் வழிதவறக்கூடிய ஆபத்துகள் நெருங்குவதை, அவர்கள் உணரவேண்டும் என எச்சரிக்கிறார் கலாநிதி ரொஜிஸ்.

## இன்ரநெற்றில் மாணவர்கள்

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்



ஃபிரான்சிஸ் ஃபோர்ட் கப்போளா

அமெரிக்க சினிமாவைப் புனருத்தாரணம் செய்த மாபெரும் இயக்குநராக - பிரான்சிஸ் போர்ட் கப்போளா போற்றப்படுகிறார். புதிய தலைமுறை இயக்குநர்களுக்குப் பெருமளவில் நம்பிக்கையூட்டிய ஒரு வழிகாட்டியாகவும் மதிக்கப்படுகிறார். மிகக் குறுகியகாலத்தில் உலகப் புகழ் பெற்ற இளம் வயது இயக்குநரான ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், ஜார்ஜ் லூகாஸ் போன்றவர்கள் மட்டுமின்றி, அமெரிக்கத் திரையுலகில் ஒரு சூறாவளிபோல அறிமுகமான அத்தனை புதுமுக இயக்குநர்களுக்கும் கப்போளாதான் 'குரு' ஸ்தானம் பெற்றிருக்கிறார்.

ஒரு தேர்ந்த வியாபாரியாகவும், அதேசமயம் படைப்புத்திறன் வாய்ந்த உன்னதக் கலைஞனாகவும் கப்போளா புகழ்பெற்றிருக்கிறார். அமெரிக்க இயக்குநர்கள் மட்டுமின்றி- வெளிநாட்டு இயக்குநர்களான - அகிரா குரோசாவா, வெர்னர் ஹெர்ஸாக் போன்றவர்களுக்கு, படத்தயாரிப்பு விநியோகம் போன்றவற்றுக்குப் பணவுதவியும் செய்திருக்கிறார். தன்னுடைய படங்களில் புதுமைகள் பலவற்றைப் படைத்த ஈடிணையற்ற பெருமையும் இவருக்கு உண்டு.

மிகக் குறுகியகாலத்தில் கப்போளா - ஹொலிவூட் மூலமாக உலகத் திரைப்பட அரங்கில் பெயர் பெற்றார். வழக்கமான ஹொலிவூட் பாணியிலிருந்து கதாபாத்திரங்களின் இயல்புகளை மாற்றி, இயல்பான மனித வாழ்க்கையை வளமான முறையில் படங்களாகப் படைத்துக் காட்டியதில் கப்போளாவின் பணி மகத்தானது.

1965 இல் வெளியான த கொட்டன் கிளப் (**THE COTTON CLUB**) படம் கப்போளாவின் வித்தியாசமான பார்வையை, மேதமைத் திறத்தை வெளிக்காட்டிய ஆரம்பகாலப் படம் எனலாம். 1972 இல் வெளியான இன்ரர் பேஸ் (**INTER FACE**) படமும் இதே தன்மையுடன் விளங்குகிறது. 1975 இல் வெளியான இவரது கோட் பாதர் (**GOD FATHER**) படம் இவரை முன்னணிக்கு உயர்த்தியது. இந்தப் படம் கப்போளாவின் படங்களிலேயே மிக அதிகமான வசூல் பெற்றுச் சாதனை புரிந்த படம். இந்தப் படத்தின் தாக்கம் உலக சினிமாவில் பரவலாகவே காணப்படுகிறது.

1979 இல் வெளியான அப்போகலிப்ஸ் நௌ (**APOCALYPSE NOW**) ஒரு மகத்தான திரைக்காவியமாகப் போற்றப்படுகிறது. இந்தப் படம் வியட்நாம் போரின் பின்னணியைக் கொண்டு வடிவம் பெற்றிருக்கிறது. ஜோசப் கான்ராட் என்கிற அமெரிக்க நாவலாசிரியர் எழுதிய கதையை அடிப்படையாகக் கொண்டு, திரைக்கதை வசனம் எழுத உலகத்திலேயே மிக அதிகமான ஊதியம் பெறுகிற ஜோன் மில்லியஸ் (**JOHN MILLIAS**) என்பவரின் கை வண்ணத்தால் செப்பனிடப்பட்டு, கப்போளாவினால் இயக்கப்பட்ட படம் இது. இந்தப் படத்தின் தயாரிப்புச் செலவு முப்பது மில்லியன் டொலர்கள். 165 நிமிடம்தான் படம் ஓடுகிறது. 1979 இல் கேன்ஸ் திரைப்பட விழாவில் - 'அப்போகலிப்ஸ் நௌ' படமும், ஜேர்மன் இயக்குநர் வோல்கர் ஷெலன் டிரா.ஃ.ப், 'டின் டிரம்' படமும் அந்த ஆண்டின் சிறந்த படத்துக்கான பரிசைப் பங்கிட்டுக்கொண்டன.

1983 இல் வெளியான 'வன் ப்ரம் த ஹார்ட்' (**ONE FROM THE HEART**) படத்தை முடிக்க முடியாமல் கப்போளா பொருளாதார நெருக்கடியால் திணறினார். பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படங்கள் தொடர்ந்து தோல்வியடைந்ததால், இந்தப் படத்தில் முதலீடு செய்யத் தயங்கினர் தயாரிப்பாளர்கள். விநியோகஸ்தர்களது இந்த முடிவுக்காகத்தான் 'வன் பிரம் த ஹார்ட்' படத்தை, 150 இலட்சம் டொலர்கள் செலவில் எடுக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், இந்தப் படம் பாதிக்கட்டத்தைத் தாண்டுவதற்குள்ளேயே 230 இலட்சம் டொலர்களை விழுங்கியது. இந்தக் கட்டத்துடன் படம் மறுபடியும் அப்படியே நின்றது. இறுதியில் இந்தப் படத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட ஸ்ட்ரேப் நிறுவனமும், பாரமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனமும் படத்தை முடிக்கத் தேவையான பண உதவியைச் செய்தன. இந்த இரு நிறுவனங்களும் தங்களது எல்லைகளை மீறியே இவருக்கு உதவின எனலாம்.

நவீன உபகரணங்கள், எலக்ட்ரோனிக்ஸ் கருவிகள் இந்தப் படத்தில் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4 ஆம் திகதி, இந்தப் படம் அமெரிக்காவில் வெளியானது. இந்தப் படம் கப்போளாவின் மற்றுமொரு மகத்தான வெற்றிப் படமாக அமைந்து, சரித்திரம் படைத்தது.

ஹொலிவூட் - ஜப்பான் கூட்டுறவில் தயாரான படம் 'மிஷிமா' (**MISHIMA**). 1985 இல் வெளியான இந்தப் படத்தை வார்னர் பிரதர்ஸ் வெளியிட்டனர். கப்போளாவும், ஜோர்ஜ் லூக்காஸும் இந்தப் படத்தின் தயாரிப்பைப் பொறுப்பேற்றிருந்தனர். படத்தின் இயக்கத்தை மற்றொரு பிரபல இயக்குநர் போல்ஸ் கிரேடர் (**POLES KRADER**) ஏற்றிருந்தார். பிரபல ஜப்பானிய எழுத்தாளர் மிஷிமாவின் வாழ்க்கை வரலாற்றை இந்தப் படம் சித்திரித்தது. இதன் வருமானம் 'மிஷிமா இலக்கிய அமைப்பின்' பாதுகாப்பு நிதிக்காக வழங்கப்பட்டது.

ஃபிரான்சிஸ் ஃபோர்ட் கப்போளா

ஹொலிவூட் திரையுலகின் முப்பெரும் கலைஞர்கள் (கப்போளா, மைக்கேல் ஜோன்ஸன், ஜோர்ஜ் லூக்காஸ்) இணைந்து தயாரித்த பிரமாண்டப் படைப்பு கப்டன் இயோ (**CAPTION IEO**). 1986 இல் இந்தப் படம் வெளியானது. தயாரிப்பை ஜோர்ஜ் லூக்காஸ் கவனிக்க, கப்போளா இயக்க, மைக்கேல் ஜோன்ஸன் கதாநாயகனாக நடித்தார். மிகச் சிறப்பு வாய்ந்த இந்தப் படம் 12 நிமிடங்கள் மட்டுமே திரையில் காட்சியளித்தது.

வியாபாரமயமான ஹொலிவூட் சினிமாவில் கலைத் தன்மையுடனும், புதிய முயற்சிகளாகவும் - அற்புதமான படங்களை வழங்கிச் சிறப்புப் பெற்றவர் கப்போளா. கப்போளா எப்போதும் கலையுடன் மட்டுமே சமரசம் செய்துகொண்டார். அதனாலேயே கப்போளாவின் படங்கள் புதிய தன்மையில் ஒளிர்கின்றன.

1965 இல் வெளியான 'த அவுட் சைடர்' (**THE OUT SIDER**) அதே ஆண்டு வெளியான 'த கொட்டன் கிளப்', 1968 இல் வெளியான பினைன்ஸ் றெயின்போ (**FINIAN'S RAINBOW**). 1972 இல் வெளியான 'இன்டர்.ஃ.பேஸ்', 1974 இல் வெளியான 'த ரம்பிள் .ஃ.பிஷ்' (**THE RUMBLE FISH**). 1975 இல் வெளியான கோட் பாதர், 1976 இல் வெளியான நான்சன்ஸ் ஒவ் ஸ்டோன், 1977 இல் வெளியான ஹார்ட் ஒவ் த டாக்னெஸ் (**HEART OF THE DARKNES**), 1978 இல் வெளியான அபோகலிப்ஸ் நௌ, 1983 இல் வெளியான '.ஃ.பார் .ஃ.புறம் த ஹார்ட்' (**FAR FROM THE HEART**), 1985 இல் வெளியான மிஷமா, 1986 இல் வெளியான 'கப்டன் இயோ' போன்ற அனைத்துமே மாறுபட்ட படைப்புகள்தான்.

1963 ஆம் ஆண்டு வெளியான டிமென்டியா - 13 (**DEMENTIA - 13**) என்கிற படம்மூலம் கப்போளா திரையுலகுக்கு அறிமுகமானார். உயரிய கமரா கோணங்களும், தரமான ஒளிப்பதிவும் - வலுவற்ற ஒரு கதையைக் கூட, உயிர்பெற வைக்கமுடியும் என்பதை, இந்தப் படத்தின் மூலம் கப்போளா நிருபித்தார். இதுவொரு திகில் படம். இந்த முதற்படமே திரைப்படத்துறை மற்றும் தயாரிப்பாளர்களுக்கு அவர் மீது நம்பிக்கையையும், மரியாதையும் ஏற்படுத்தின. தொடர்ந்து வெளியான கப்போளாவின் படங்கள் இந்த நம்பிக்கையை வலுப்படுத்தி வளர்த்தன.

1966 இல் வெளியான 'யு ஆர் எ பிக் போய் நௌ' (**YOU ARE A BIG BOY NOW**), 1967 இல் வெளியான '.ஃ.பினைன்ஸ றெயின்போ', 1969 இல் வெளியான 'த றெயின் பீப்பிள்' (**THE RAIN PEOPLE**) போன்ற படங்களை இந்த வகையில் குறிப்பிடலாம். இந்தப் படங்களின் அமைப்பு, பார்வையாளர்களைப் பிரமிக்க வைத்தது. கப்போளா திரையுலகில் மேலும் மேலும் புதிய முறையிலான ஒளிப்பதிவு நுட்பங்களுடன் அவற்றை ஒருங்கிணைத்துக் காட்சியாக்கித் தரும் வேகமும், விறுவிறுப்பும் நிரம்பிய வியப்புக்குரிய படத்தொகுப்பு முறையும், ஒருசேர அனைத்துத் தரப்பினரையும் வரைமுறையின்றிக் கவர்ந்தன.

'.ஃ.பினைன்ஸ றெயின்போ' திரைப்படத்தில் இசையமைப்பின் பங்கை அற்புதமாக வெளிக்காட்டிய படம் எனலாம். இதன் பின்னணியில் கப்போளாவின் இசைஞானமும், உள்ளுணர்வுமே மிகப்பெரிய வலுக்கொடுத்தன. 1970 ஆம் ஆண்டில் வெளியான 'பட்டன்' (**PATTON**) படத்துக்குத் திரைக்கதை வடிவமைத்துக் கொடுத்தார் கப்போளா.

(தொடரும்)

# வர்ண முகங்களையே



ஆண் குரங்குகளின் கன்னங்கள் இளம் சிவப்பு நிறமாக இருப்பதையே அநேகமான பெண்குரங்குகள் விரும்புவதாக, ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளதாம். ஆண் குரங்குகளில் தெஸ்ரோதுரோன் ஓமோன்கள் அதிகரித்திருந்தால், உடல் நிலை நல்லநிலையில் இருந்தால் அவற்றின் கன்னங்கள் சிவப்பு நிறமாக மாறும். மனிதர்களில் இந்த எதிர்பார்ப்பு வேறு மாதிரியாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இங்கு பெண்களே அதிகம் முகங்களை அழகுபடுத்தி, வர்ணச் சாயங்களைப் பூசி அழகுபடுத்துகின்றனர்.

வாலில்லாக் குரங்கினங்களில்தான் ஆண்கள் அதிகமான, பிரகாசமான வர்ணங்களைக் கொண்டிருப்பதாக ஸ்ரிர்லிங் பல்கலைக்கழக உளவியல்துறை ஆய்வாளர் ஹோரிவேயிட் கூறுகின்றார்.

# பெண் குரங்குகள்

இந்த நிறவமைப்புகள் இனப்பெருக்கத்திற்கான எதிர்ப்பால் கவர்ச்சிக்காகவே என்கிறார் இவர். பிரகாசமான இந்த வர்ணங்கள் கொண்ட ஆண் குரங்குகளையே, பெண்குரங்குகள் அதிகம் நாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து, 1876 இல் இயற்கை விஞ்ஞானி டாவினும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இப்போதே ஆய்வின்மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# விரும்புகின்றன

ஆய்வுகூடங்களில் அடைத்து வைத்திருக்கும் பெண் குரங்குகளுக்கு, சில ஆண் குரங்குகளின் முகத்தோற்றங்களைக் காட்டியபோது, அவை கூடுதலாகப் பிரகாசமான வர்ணங்கள் கொண்ட ஆண் குரங்குகளின் முகங்களையே ஆர்வமாக ஆராய்ந்தன என, உயிரியலாளர் கிரேய்க் ரொபர்ட ஸ் தெரிவித்தார்.

# கடலால் விழுங்கப்படும்



காலநிலை வேறுபாடுகளினால் பிரிட்டன் தனது கடற்கரைகளை இழந்துவருகின்றது. கடலரிப்பு பல பாறைகளை விழுங்கி வருகிறது என, சூழல் பாதுகாப்பாளர்கள் எச்சரித்துள்ளனர். பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், இன்னும் 100 வருடங்களில் பிரிட்டன் தனது கடற்கரைகளை இழக்க வேண்டியேற்படலாம். இது குறித்து கடந்த புதனன்று பிரிட்

# ஆபத்தில் பிரிட்டன்

டனின் சர்வதேச சூழலியலாளர்களின் மாநாடு ஒன்றும் நடைபெற்றுள்ளது.

பிரிட்டனில் தென்பகுதி, வடபகுதியைவிட அதிகமாகக் கடலால் விழுங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எசக்ஸ்ஸிலும் பெருமளவு சதுப்பு நிலங்கள் அழிந்துவிட்டன.

# மூளையின் வலுவில் இயங்கும்



உடல்வலு மோசமானவர்கள் தமது மூளையின் சக்தியைப் பாவித்து, உலாவரக் கூடிய சக்கரநாற்காலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதைப் பாவிப்பவர் மின்னினைப்பைக் கொண்ட, ஒரு தலைக்கவசத்தை அணிந்து, அதன்மூலம் மூளையின் சக்தியை - பொறிமுறைச் சக்தியாக மாற்றி, சக்கரநாற்காலியை இயக்கமுடியும்.

இதன் உருவாக்கம் ஆரம்ப கட்டத்தில் இருந்தாலும், செயற்பாடு உச்சமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலத்திரனியல் தொப்பி

# சக்கர நாற்காலி

மூலம் இந்தச் சக்கரநாற்கா லியை முன்பக்கமாகவும், இடது, வலது பக்கமாகவும் திருப்பமுடியும். மூளையின் செயற்பாட்டை இவ்வாறு மாற்றும் பொறிமுறை ஏறத்தாழ EEG தொழில்நுட்பத்தை ஒத்தது.

# 25 ஆவது வயதை கொண்டாடும்



உலகின் முதல் பரிசோதனைக் குழாய் மூலம் பிறந்த பெண்குழந்தை - கடந்த சனியனறு தனது 25 ஆவது வயதைக் கொண்டாடினாள். தான் பிறந்த கேம்பிரிட் ஜக்ஷேயர் வைத்திய சாலைக்கு அன்று வந்திருந்த லூசி பிறவுண் என்ற இந்த யுவதி - அங்கு கூடியிருந்த ஏணைய பரிசோதனைக் குழாய் மூலம் பிறந்த ஆயிரம் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாகத் தனது பொழுதைக் கழித்தார்.

எனது பிறப்பை மேற்கொண்ட விஞ்ஞானிகளுக்கும், வைத்தியர்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். நான் ஒரு விசேடமானவளாக என்னைக் கருதவில்லை. நான் ஒரு சாதாரணமானவளே என அங்கு லூசி கூறினாள். 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம 25 ஆம் திகதி லூசி பரிசோதனைக் குழாய மூலம் பிறந்த முதற் குழந்தையாகும்.

அது முதல் உலகெங்கும் இலட்சக்கணக்கான பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் பிறந்துள்ளன.



என்னுடைய 18 ஆவது, 21 ஆவது பிறந்த தினங்களின்போது, ஊடகங்கள் என்னை மிகவும் பிரசாரப்படுத்தின. ஆனால், எனது வாழ்வு வழமைபோல இருக்கிறது, என்கிறார் தற்போது பிறிஸ்டல் நகரில் வசிக்கும் தபால் ஊழியரான லூசி பிறவுண்.

# உலகின் முதல் பரிசோதனைக்குழாய் குழந்தை

# கிறீன்லாந்து ஆழத்திலிருந்து காலநிலை அறிய படிவங்கள்



பனிபடர்ந்த கிறீன்லாந்தின் மத்திய பகுதியில் ஆழமாகத் தோண்டி, விஞ்ஞானிகள் பனிப்படிவங்களை மீட்டுள்ளனர். இதன்மூலம் கடந்த 1,20,000 வருடங்களாக இங்கு காணப்பட்ட காலநிலை வேறுபாட்டுத் தரவுகளைப் பெறமுடியும் என அவர்கள் கூறுகின்றனர். கடந்த ஏழு வருடங்களாக இயந்திரங்கள் மூலம் துளையிட்டு, 3000 மீற்றர் ஆழத்தினைக் கடந்து சென்ற, 17 ஆம் திகதி இவர் கள் தமது இலக்கினைத் தொட்டனர். அடியிலிருந்து பெறப்பட்ட உருகிய பனி நீரில் காணப்படும் நுணணுயிரிகள் மூலம் ஏராளமான தரவுகளைப் பெறமுடியுமெனக் கருதப்படுகின்றது. இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெளி யுலகுடன் தொடர்பின்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் இந்தப் பூமி சூடானதாக இருந்து, பின்னர் துருவங்களில் எவ்வாறு பனிப்படிவங்கள் ஏற்பட்டன என்பதுபற்றி இனிமேல் தெரியவரலாம்.

# மூளையின் செயற்பாட்டை பெற்றோர் அறியவேண்டும்



எதிர்காலத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி விடயங்கள் குறித்து, அவர்களது ஆசிரியர்களுடன் உரையாட முன்பு, மனித மூளையின் செயற்பாடுகள் குறித்த தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யவேண்டியநிலை ஏற்படவுள்ளது.

நரம்பியலுடன் கல்வியைத் தொடர்புபடுத்தும் ஒக்ஸ்போர்ட் புரூக்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரும், லேயி ஷேஷ்டர் பேராசிரியர் ஒருவரும் மேற்கண்ட எதிர்வுகூறலை முன்வைத்துள்ளனர். கற்பித்தலைப் புரிந்துகொள்ளல், கற்றல், ஞாபகம், நுண்ணறிவு, உணர்ச்சிகள் என்பவற்றுடன் மனித மூளையின செயற்பாட்டை இவர்கள் அண்மைக்காலமாக ஆராய்ந்து வருகின்றனர். இதன்மூலம் கிடைக்கும் தமது ஆய்வு முடிவுகளை இவர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைத்து வெளியிடவுள்ளனர்.

தமது பிள்ளைகளின் ஞாபகசக்தி குறைவு குறித்துப் பெற்றோர் முறையிடும்போது, அதற்குப் பரிகாரமாக ஆசிரியர் மூளையின் செயற்பாட்டை ஆதாரமாகக்கொண்டு எடுக்கவேண்டிய பரிகாரங்களை விளக்குவார். அந்தவேளை, மூளையின் செயற்பாடு குறித்த முழு விளக்கத்தைப் பெற்றோர் அறிந்திருந்ததால் தானே, ஆசிரியர் என்ன கூறுகிறார் எனப் பெற்றோருக்கும் விளங்கும்!

# மார்பக புற்றுநோய்க்கான மரபணுவின் தாக்கம்



மார்பகப் புற்றுநோயைத் தூண்டும் மரபணு, ஏன் இந்த நோயைத் தூண்டுகிறது என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். அவுரோரா - 2 எனப்படும் இந்த மரபணு எவ்வாறு செயற்படுகிறது என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் மார்பகப் புற்றுநோயைத் தடுக்கப் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்த மரபணு 16 சதவீதமான மார்பகப் புற்றுநோய்களில் அதிவீரியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஏனையவகைப் புற்றுநோய்களில் 94 சதவீதத்திற்கு, இந்த மரபணுவின் தாக்கம் காணப்படுகிறது.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கெடுகுடி, சொற்கேளாது

-பழமொழி

# நமது நோக்கு

## அழிவுப்பாதையில்...!

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வுப் போர்நிறுத்த உடன்பாடு பதினேழு மாதங்களை நிறைவு செய்யும் நிலையில்-

சமீபகாலமாக, இந்த உடன்பாட்டுக்கு எதிராக பிக்குகளின் ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் மற்றைய எதிர்ப்பு நடவடிக்கைகளும் தீவிரமடைந்து வருவதைக் காணமுடிகிறது.

இத்தகைய எதிர்ப்புக் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே - நாடு முழுவதிலுமுள்ள, ஆயிரத்து ஐந்நூறு விகாரைகளில் - சமாதான முயற்சிகளுக்கு விரோதமான கருத்துக்களைப் பரப்பும் நோக்கில், தகவல் நிலையங்களைத் திறக்கவுள்ளதாகத் தேசிய பிக்குகள் முன்னணி கூறியுள்ளது.

இந்த உடன்பாடு, நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் - இந்த ஆபத்திலிருந்து மக்களை விழிப்புணர்வூட்டுவதற்காகவே, இந்தத் தகவல் நிலையங்கள் இயங்கப் போவதாகவும் தேசிய பிக்குகள் முன்னணி அறிவித்துள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியைப் பொறுத்தவரையில், இந்த அமைதி முயற்சிகள் - நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாக, ஒருமைப்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பாகவே கருத்திற்கொண்டிருக்கிறது.

சமாதானத்தைப் போதித்த புத்த பகவானின் வழி நடக்கும் பௌத்த பிக்குகளே, சமாதான முயற்சிகள்- நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலென்று கூறுகின்றனர் என்றால், நாட்டின் நிலையைப் பற்றிக் கூறுவதற்கு வேறெந்த உதாரணமும் தேவையில்லை.

சமாதானம், அமைதி முயற்சிகள் என்ற வார்த்தைகளைக் கேட்டாலே, கொதித்தெழுந்து கூத்தாடும் நிலையில்தான் பௌத்த பிக்குகள் இருக்கின்றனர்.

தேசிய பிக்குகள் முன்னணி, சமாதான சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் - ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற சக்திகளுடன், போட்டி போட்டுக்கொண்டு செயற்படுவதையும் காணமுடிகின்றது.

ஆரம்பத்தில், நோர்வேயின் மத்தியஸ்தத்தை எதிர்த்தவர்கள் - பின்னர், போர்நிறுத்த உடன்பாட்டை எதிர்த்தவர்கள் - அதன்பிறகு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டம் - இப்போது புரிந்துணர்வு உடன்பாட்டால், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் என்று வந்து நிற்கிறது.

எப்படியாவது சமாதானத்தைக் குழப்பி, நாட்டில் மீண்டும் இரத்தக்களரியை ஏற்படுத்தி - இரத்த ஆறு ஓட வைப்பதில் இவர்களுக்கு அப்படி என்ன இலாபம் கிடைத்துவிடப்போகின்றதோ தெரியவில்லை.

ஆனால், தம்து சமாதான எதிர்ப்புக் கருத்துக்களில், இவர்கள் உறுதியோடு இருப்பது மட்டும் தெரிகிறது. இது எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு, பெரும் அச்சுறுத்தலாக உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னரும், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், ஒப்பந்தங்களாக உருவெடுத்தபோது - அதற்கு எதிரான போராட்டங்களை நடத்தி, அடக்கிய பெருமையும் பௌத்த பிக்குகளையே சாரும்.

இலங்கையிலுள்ள பௌத்த மதபீடங்கள், இனத்துவேஷக் கருத்துக்களை வெளியிடும் நிலையங்களாகவே உள்ளன.

இந்தநிலையில் - அமைதி முயற்சிகளுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவதற்கு, விகாரைகளைத் தேர்வு செய்துள்ளதிலிருந்து, தமிழ்மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறை, எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

அமைதி, சமாதானத்தை வலியுறுத்திய புத்தரின் ஆலயங்கள் - இனி அமைதி முயற்சிகளுக்கு எதிரான கேந்திரங்களாக மாற்றப்படுவது - ஆலயங்களில் புத்தரின் புனிதத்தன்மையையே கேள்விக்குறியாக்கப் போகினறது.

இதைப் பற்றியெல்லாம் பௌத்த மதத்தலைவர்கள் எவரும் கண்டுகொள்வதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம், நாட்டில் யுத்தம் ஏற்படுவதுதான் என்றால்- இதைப்போன்ற அநாகரிகமான செயல் வேறெதுவும் இருக்கமுடியாது.

இதேவேளை - நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு, இந்த ஒப்பந்தம் ஆபத்தை ஏற்படுத்தும் எனக்கூறும் பிக்குகள் முன்னணி, ஒரு விடயத்தை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த யுத்தநிறுத்தம் அமுலாகாதிருந்தால், சில சமயங்களில் நாட்டில் ஒருமைப்பாடு பாதிக்கப்பட்டிருக்கலாம்.

இவற்றையெல்லாம் அறிந்திருந்தும், பிக்குகள் போராட்டம் நடத்தியது - நாட்டை அது அழவுப்பாதைக்கே இட்டுச்செல்லுமே தவிர, ஆக்கபூர்வமானதாக அமையாது.

# கடந்த பதினெட்டு மாதங்களில் 20 ஆயிரம் பேர் வேலையிழப்பு!

கடந்த 18 மாதங்களில், நாடளாவிய ரீதியில் 20 ஆயிரத்து 947 பணியாளர்கள், தமது வேலைகளை இழந்திருப்பதான அதிர்ச்சித் தகவலொன்றை - கம்பனிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கான தொழிற்சங்கம் வெளியிட்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் இயங்கிய 49 கம்பனிகள், பதினெட்டு மாதங்களில் திடீரென மூடப்பட்டதால், அங்கு பணியாற்றி வந்த 20 ஆயிரத்து 947 பணியாளர்கள் தங்கள் வேலைகளை இழந்துள்ளனர்.

இவ்வாறு மூடப்பட்ட கம்பனிகளில் பெரும்பான்மையானவை கொரிய நாட்டவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இரண்டு கம்பனிகள் - இந்தியர்களாலும், இரண்டு கம்பனிகள் - பல்தேசியக் கம்பனிகளாலும், ஒரு கம்பனி - இந்தோனேஷிய நாட்டவர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

இவற்றில் பெரும்பாலானவை ஆடைக் கைத்தொழில் கம்பனிகள் ஆகும்.

மூடப்பட்ட கம்பனிகளுள் - கொரிய நாட்டவர்களுக்குச் சொந்தமான கம்பனிகள், பணியாளர்களுக்கு எந்தவிதமான முன்னறிவித்தலையும் கொடுக்காது திடீரென மூடப்பட்டதுடன், முதலீட்டாளர்களும் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக, ஊழியர் தொழிற்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை - இலங்கையைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களும் தமது பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதவாறு, முதலீட்டுப் பிரச்சினையையும், இலாபப் பற்றாக் குறையையும் எதிர்நோக்கி வந்ததால், அந்தக் கம்பனிகளும் மூடப்பட்டதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கம்பனிகள் மூடப்பட்டது தொடர்பாக, இலங்கையின தொழிலாளர் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இலங்கை முதலீட்டு கொள்கைகளுக்கான விதிமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை எனவும், இதனால் தொழிலாளர் நடுத்தெருவில் நிற்கும் நிலை உருவாகியுள்ளதாகவும், தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழியர்கள் பணிநீக்கம் தொடர்பாக அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறிய போதிலும், அரசு - எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும், தொழிற்சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

## தமிழக அகதிகள் படிப்படியாக தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடு!

இந்தியாவின் தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், இலங்கைக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளைப் படிப்படியாகச் செய்யவுள்ளதாக, வெளியுறவு அமைசசின் செயலாளர் நிஹால் ரொட்றிக்கோ தெரிவித்தார்.

புதுடெல்கியில், இந்திய - இலங்கை வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அகதிகள் தாயகம் திரும்பி, மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்குரிய ஏற்பாடுகள் படிப்படியாக முனனெடுக்கப்படும் என்றும், நிஹால் ரொட்றிக்கோ மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னோடியாக, கண்ணிவெடியகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பாதுகாப்பு விடயங்களுக்குத் தீர்வு காணப்பட்டு, விரைவில் அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும், அவர் குறிப்பிட்டார்.

# படைமுகாம்களை இடம்மாற்றும் திட்டத்துக்கமையவே வடமராட்சி - பொற்பதியில் படையினர் முகாம் அமைப்பு!

## இராணுவத் தளபதி லயனல் பலகல்ல கூறுகிறார்

(வடமராட்சி)

வடமராட்சி - பொற்பதிப் பகுதியில், இராணுவத்தினர் அமைத்துவரும் புதியமுகாம் - உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள படைமுகாம்களை அகற்றி, புதிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யும் திட்டத்துக்கு அமைவாகவே அமைக்கப்பட்டு வருவதாக, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள இராணுவ முகாம்களை அகற்றி, அவற்றை புதிய இடங்களில் நிர்மாணிப்பதற்கான 88 தொகுதிகள் குடாநாடெங்கும் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 15 அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகள். அந்த இடங்களில் ஒன்றே, வடமராட்சி பொற்பதியில் அமைக்கப்பட்டுவரும் இராணுவ முகாம் பகுதியென, இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

பொற்பதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த இராணுவ முகாமை அகற்றும்படி, மக்கள் நடத்திய போராட்டம் பற்றி கருத்து தெரிவித்த இராணுவத் தளபதி, புதிய இடங்களில் முகாம்களை அமைப்பதற்கு இராணுவத்தினருக்கு அனுமதி கிடைக்காது விட்டால் அல்லது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது விட்டால், தாங்கள் தனியார் வீடுகளில் இருந்து எவ்வாறு விலகிச் செல்ல முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

தற்போது, யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைக்கும் பணி நடைபெறாததால், யாழ் நகரப் பகுதியில் நிலைகொண்டிருக்கின்ற இராணுவத்தினர் உடனடியாக விலகும் திட்டத்தை நடைமுறைப்படுத்தமுடியாமல் இருக்கின்றது எனவும், புதிய இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கும் பட்சத்திலேயே இராணுவத்தை விலகிக் கொள்ள முடியும் எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் இருந்து படைகளை விலக்குதல் என்பது, நிலைமை முன்னேற்றம் அடையும் சந்தர்ப்பத்திலேயே சாத்தியமாகுமெனவும் பலகல்ல கருத்துக் கூறினார்.

ஆனால், பலாலி விமான நிலையத்தைச் சுற்றியிருக்கும் உயர்பாதுகாப்புவலயத்தில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியாது எனவும் ராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார.

## 'ரோகண விஜேவீர மோசமான கொலைகாரன்' அனுராவின் கூற்றுக்கு ஜே.வி.பி. கண்டனம்!

ரோகண விஜேவிர - மிலேச்சத்தனமான கொலைகாரன் என்று, அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ள கருத்தை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டித்துள்ளது.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே, ரோகண விஜேவீரவைப் பற்றி, அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டிருந்தார், எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது தலைவர் பற்றிக் கூறிய கூற்றை வாபஸ் பெறுமாறு, ஜே.வி.பியின் மத்திய குழு, அனுராவைக் கேட்டுள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு, கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கு மத்திய குழு அதிகாரம் வழங்கியுள்ளது.

தமது கட்சித் தலைவர் பற்றி அனுரா கூறிய கருத்தால், ஜே.வி.பி - சுதந்திரக் கட்சிகளுக்கிடையில் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளால் என்ன பயன் ஏற்படப்போகின்றது என்று, ஜே.வி.பி. - சுதந்திரக் கட்சியிடம் கேட்டுள்ளது.

# அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை பொ.ஐ.முவுக்குள் இழுக்கவில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவிப்பு



பொதுஜன ஐக்கிய முன்னணியில் அமைச்சராக இருந்து, பின்னர் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோடு முரண்பட்டு - கட்சியிலிருந்து விலகி, ஐ.தே.கட்சியில் இணைந்து அமைச்சராகப் பணியாற்றி வருகின்ற எஸ்.பி. திஸநாயக்கவை, மீண்டும் பொ.ஐ. முன்னணிக்குள் இழுப்பதற்கான முயற்சியில் இறங்கவில்லையென, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் திஸநாயக்கவை இணைப்பதற்கு, அவரோடு, தான் எந்தவிதமான சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை எனவும், மங்கள சமரவீர தெரிவித்தார்.

பொ.ஐ.முன்னணிக்கு துரோகம் இழைத்து, ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வருவதற்குத் துணைபுரிந்தவர் எஸ்.பி திஸநாயக்க. இந்த நிலையில், அவரின் ஆதரவைப் பெற்று, மீண்டும் ஆட்சிக்கு வர, பொதுஜன ஐக்கிய முன்னணி எக்காலத்திலும் முயற்சிக்காதென மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்காக, ஐக்கிய தேசிய முன்னணிக்குள் இருந்து அமைச்சர்களைப் பெற ஜனாதிபதி திட்டமிடுகிறார் என்பது திட்டமிடப்பட்ட வதந்தி எனவும் -

திஸநாயக்கவைப் பொறுத்தவரையில், அவர் ஐக்கிய தேசிய முன்னணியில் சில காரியங்களைப் பெறுவதற்காக, தனக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் தொடர்பிருப்பதாக, பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றார் எனவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

## இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை!

வடமராட்சிக் கடற்பரப்பில், அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த - மீன்பிடி, நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் மீன்பிடி அமைச்சுக்கும் கடிதம் மூலம் முறையிடவுள்ளதுடன், உரிய நடவடிக்கை எடுக்கும்படி அழுத்தம் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக, இந்திய மீனவர்கள் - ட்றோலர்கள் மற்றும் மீன்பிடிக்கலங்கள் மூலம் வடபகுதிக் கடலின் பெருந்தொகையான கடல்வளங்களை அள்ளிச் செல்கின்றனர். இதனால், வடக்கு மீனவர்கள் - மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன் தொழிலையும் இழந்து வருகின்றனர்.

இது தொடர்பாக - மீனவ சமாசங்கள், சங்கங்கள் என்பன நீரியல்வள அமைச்சுக்குப் பலமுறை எடுத்துக் கூறியும், இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனவும் மீனவ சங்கத்தினர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

# புலம்பெயர் தமிழர் வாழ்வுடன் இணைந்த போல் மாட்டினே அடுத்த கனேடியப் பிரதமர்!

கடந்த ஜூலை 17 ஆம் திகதி, கனடாவின் தலைநகரிலிருந்து வெளிவரும் 'ஒட்டாவா சிற்றிசன்' (**Ottawa Citizen**) என்ற பத்திரிகையில் ஈழத்தமிழரான குமரன் மூர்த்தி என்பவர் எழுதிய கடிதமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அக்கடிதம் சமீபகாலமாக மீண்டும் கனேடியத் தமிழர்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் வசவுகளைப் பற்றிய உண்மைகளைத் தெரிவிப்பதாக அமைந்திருந்தது.

அதாவது, கனேடியத் தமிழ் சமுதாயத்தைக் குறிவைத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை மேற்படி பத்திரிகையும் தாங்கிவருவதைச் சுட்டிக்காட்டிய அவரது கடிதம், இவ்வாறான செய்திகளின் தோற்றத்திற்கான காரணத்தையும் விளக்கியது.

கனடாவின் ஆளும் லிபரல் கட்சியின் தலைமைக்கான வேட்பாளர் போல் மாட்டினை இலக்குவைத்து, கனேடிய கூட்டணிக் கட்சியின் (**Canadian Alliance**) - வெளியுறவு விமர்சகர் ஸ்ரொக்வெல் டே (**Stockwell Day**) மேற்கொண்ட தாக்குதலோடு இந்த உண்மைக்குப் புறம்பான பரப்புரைகள் ஆரம்பமானது எனக் குறிப்பிட்ட குமரன் மூர்த்தி - ஸ்ரொக்வெல் டேயைப் பொறுத்தவரை, ஒரு சிறுபான்மை இனத்தின் செலவில், போல் மாட்டினிற்கு எதிராகச் செயற்படுவதில் சம்மதமிருக்கலாம்.



கட்சியின் இளைய தலைமுறை உறுப்பினருடன் போல் மார்ட்டின்

ஆனால், தனது கடிதத்தை ஒட்டாவா சிற்றிசன் பத்திரிகை ஒரு பகிரங்க அறைகூவலாக எடுத்து, தமிழ் மக்களிடையேயான உண்மை நிலையை அறிவதற்கு ஒரு சுதந்திரமான கருத்தாய்வை மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டியுள்ளார்.

இந்தக் கடிதமே இக்கட்டுரைக்கான அடிநாதமாகிறது. இப்போது தமிழீழத்திற்கு அடுத்தபடியாக ஈழத் தமிழர்கள் அதிகளவில் வாழுகின்ற நாடு கனடா. கனடாவின் சமூக வோட்டத்தில் ஈழத் தமிழர்கள் தம்மை இணைத்துக்கொண்டு, அதன் நாளாந்தச் செயற்பாடுகளில் இரண்டறக் கலந்துவருவதோடு, பல்கலாசாரக் கட்டமைப்பில் தம்மை ஒரு அங்கமாக இணைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்தவகையில் கடந்த 10 வருடங்களாக ஆட்சியில் நீடித்துவரும் லிபரல் கட்சியின் அண்மைக்காலத்து வரலாற்றுடனும், தமிழர்கள் பின்னிப்பிணைந்து விட்டார்கள்.

நூற்றாண்டுக்கு மேலாக இயங்கிக்கொண்டிருக்கும் லிபரல் கட்சியின் இப்போதைய ஆட்சி - 1993 இல் ஆரம்பித்தது. 1993 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி கண்ட லிபரல் கட்சியின் தற்போதைய பிரதமரான ஜீன் கிரச்சியனிற்கு, அடுத்தபடியாகத் தலைவர் பதவியை, பிரதமர் பதவியை வகிக்க முழுத் தகுதியுமுள்ளவராக அடையாளம் காணப்பட்டவர் போல் மார்ட்டின்.

சிறந்த ஒரு நிதியமைச்சராகத் தன்னை நிலைநிறுத்தி, கனடாவின் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைச் சீராக்கி, அதனை உபரி வரவு-செலவுத் திட்டமாக்கியவர் என்ற பெருமையைப் பெற்றவர். அத்தோடு மக்களைக் கவரும் ஆளுமை படைத்த அரசியல்வாதியாகவும் அடையாளம் காணப்பட்டவர்.

அப்படியான போல் மார்ட்டினின் அரசியல் வாழ்வில், கனேடியத் தமிழர்கள் தொடர்பான வரலாறும் இணைந்து விட்டது. இதை இன்னொரு புறமாகச் சொல்வதானால், ஆளும் லிபரல் கட்சியின் செல்வாக்கைச் சரிப்பதற்கும், அதன் தலைவர் பதவிக்கான வேட்பாளரான போல் மார்டினின் ஆதரவைக் குறைப்பதற்கும், கனேடிய தமிழர் சமுதாயத்தைக் கனேடியக் கூட்டணிக் கட்சி மற்றும் பழமைவாதம் சார்ந்தோர் பயன்படுத்தினார்கள் என்றே எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை இதற்கான விலையாக அவை நிரைப்படுத்தின. இவற்றைத் தெளிவாக நினைவுகூர்வதற்கு, நாம் நான்கு ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லவேண்டும்.

ஆம். 1999 ஆம் ஆண்டு வழமைபோல் கனேடியத் தமிழர் சங்கங்களின் சம்மேளனம், தனது வருடாந்த இரவு விருந்தை ரொரன்ரோவில் நடத்தியிருந்தது. கனடாவின் சகல பகுதிகளிலுமுள்ள தமிழ்ச்சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்ட கூட்டமைப்பான கனேடியத் தமிழர் சங்கங்களின் சம்மேளனம் - ஆண்டுதோறும் ஒன்றுகூடல் விருந்துபசாரம் ஒன்றை நடத்திவருவது வழமை. அந்தவகையில் 1998 ஆம் ஆண்டிற்கான விருந்துபசாரம் ஒரு விழாப் போல் நடைபெற்றது. வழமைபோல் பல அரசியல் தலைவர்கள் அதில் பங்கெடுத்துக் கொண்டனர். அதில் போல் மார்ட்டினும் ஒருவர்.

ஆனால், முற்றிலும் எதிர்பாராத வகையில் அந்த விருந்துபசாரம் கூட்டணிக் கட்சி சார்ந்தவர்களாலும், வலதுசாரிகள் மற்றும் எதிர் தேவை உள்ளவர்களாலும் பாதகமான முறையில் செய்தியாக்கப்பட்டது. மக்களைக் கவரும், ஆளுமைகொண்ட அரசியல்வாதியான போல் மார்ட்டினை நேரடியாக எதிர்க்கத் துணிவில்லாதவர்கள், பயங்கரவாத நடவடிக்கைகளிற்கு நிதி சேர்க்கவென நடத்தப்பட்ட ஒரு நிகழ்வில் - போல் மார்ட்டின் உள்ளிட்ட சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள், என்ற குற்றச்சாட்டை தேசியரீதியாக எடுத்துச்சென்றனர். எந்தவித உண்மைகளும் ஆராயப்படாமல், எழுந்தமானமாக இப்பரப்புரையை அவர்கள் கொண்டுசென்றதே, அவர்களிற்கான தோல்வியுமாயிற்று.

ஏனென்றால், 10 சங்கங்களின் கூட்டமைப்பான கனேடிய தமிழர் சங்கங்களின் சம்மேளனம் ஒரு ஆடம்பர ஹோட்டேலில் நடத்திய அந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்களிடம் - தலைக்கு 60 டொலர்களை அறவிட்டது. ஐந்து நட்சத்திர மண்டபத்தில் நடைபெற்ற ஆங்கிலமயமான இரவுநேர உணவுப் பரிமாறலிற்கான கட்டணத்தைக் கட்ட, அந்தத் தொகை போதுமானதாக இருக்காது என்பதே பலரதும் கணிப்பு.

ஆனாலும், அதையே ஒரு பெரிய நிதி சேகரிப்பு நிகழ்வாகக் காட்ட, மேற்கொள்ளப்பட்ட பரப்புரையை அந்தக் காலகட்டத்தில் வெல்லமுடியவில்லை. அதற்கான காரணம்- எதிர்ப்பரப்புரையை மேற்கொண்ட அக்கட்சிக்கு ஆதரவான ஊடகங்கள் பலமிக்கனவாக இருந்தன.

தமிழ்மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் பரப்புரை நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொண்டிருந்த கனேடியத் தமிழர் சங்கங்களின் சம்மேளனம், அதற்கு முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற இவ்வாறான விருந்துபசாரங்களில் வைத்து புனர்வாழ்விற்கென சில ஆயிரம் டொலர்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்குவது வழக்கம்.

ஆனால், வருவாய்க்கு மேல் செலவு இருந்ததால் போல் மாட்டின் கலந்து கொண்ட 1998 ஆம் ஆண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கான நிதிக் கையளிப்புக்கூட இடம் பெறவில்லை. எனினும், கனேடியத் தமிழர் சங்கங்களின் சம்மேளனம் - இவ்வாறான ஒரு விபரீதமான பழிவாங்கலிற்கு இலக்காகும் வாய்ப்பைத் தவிர்க்கமுடியாதபடி மாற்றாரின் பரப்புரை வலிமை பெற்றதாக இருந்தது.

அதிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பது, 1995 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டு, அதற்கான பதிவு இலக்கத்தையும் பெற்று, சட்டரீதியாகவே செயற்பட்டுவரும் ஒரு அமைப்பு. வட-கிழக்கு மக்களின் புனர்வாழ்விற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுச் செயற்படுத்துவதோடு, அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெப், ஐக்கிய நாடுகளிற்கான அகதிகள் உயர் ஸ்தானிகராலயம், றெட்பானா, நோராட் போன்ற அனைத்துலக உதவி நிறுவனங்களைப் பங்காளர்களாகக் கொண்டிருப்பதோடு, கனேடிய அரசு (**CIDA**) உட்பட பல அரசுகளின் உதவித் திட்டங்களைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்தும் ஒரு அமைப்பு. அந்த வகையில், சம்மேளனத்தின் முந்தைய பங்களிப்புக்கள்கூட குற்றச்சாட்டுகளிற்குள் சிக்கமுடியாதவையாகவே இருந்தன.

மக்களாதரவைக் கொண்ட ஒரு கவர்ச்சிகரமான அரசியல்வாதியை நேர்மையாக வெல்ல முடியாமல், அதற்கான உசாத்துணையாக எமது இனத்தைப் பயன்படுத்திய சக்திகள், தமது கட்சி வரலாற்றில் மிகப்பெரும் தவறொன்றை இழைக்கின்றன என்பதை ஏனோ புரியாமல் புரிந்திருக்கவில்லை. அதற்கும் மேலாகத் தமது குற்றச்சாட்டுத் தொடர்பான உண்மைகளைத் தேடும் பொறுமையும் அவற்றிற்கிருக்கவில்லை.

எந்தவித ஆதாரங்களையும் தமது செய்திகளில் வழங்கவில்லை. மாறாக, எழுந்தமானமான பொய்க்கூற்றுக்களே முன்னிலைப்படுத்தப்பட்டன. அவை அவ்வாறு மேற்கொண்ட பரப்புரையின் பெறுபேறுகூட, அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் அமையவில்லை. மாறாக போல் மாட்டினின் செல்வாக்கு மேல்நோக்கியே சென்றுகொண்டிருந்தது.

மறுபுறத்தே - இச்செயற்பாட்டில் ஆதாயம் தேடிய பெரும்பான்மை இனத்தவரும், இலங்கை அரசு தரப்பும் போல் மார்ட்டினை விரும்பத்தகாதவராகவே கருதினர். லிபரல் கட்சியை ஆதரித்தவர்கள்கூட, போல் மாட்டின் தரப்பாக இருப்பதை விரும்பாதவர்களாக இருந்தனர்.

ஆக மொத்தம் 250,000 தமிழர்களைக் கொண்ட கனேடியத் தமிழ்ச் சமுதாயத்தை ஒடுக்க, அந்த எண்ணிக்கையில் 5 வீதம்கூட இல்லாத பெரும்பான்மை இனத்தவர் - மாற்றுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக லிபரல் கட்சிக்குத் தலையிடி கொடுக்கும் செயற்பாட்டையும் தொடர்ந்தனர்.

குறிப்பாக, கனேடிய தமிழ்ச் சமூகத்தின் அமைப்புக்களைக் குறிவைத்து, தமது செயற்பாடுகளை நகர்த்தினாலும், லிபரல் கட்சியும் அது தொடர்பான தாக்கத்தைப் பெறுவதாகவே இருந்தது.

இந்த நிலையிலே, போல் மார்ட்டினிற்கு எதிராக தலைமைப் போட்டியில் இறங்கியி

**சுதர்மா**

ருந்த துணைப் பிரதமர் மான் லி போட்டியிலிருந்து விலகியிருக்கிறார். தன்னால் கட்சிக்குள் 1 முதல் 20 வீதமான ஆதரவையே திரட்ட முடிந்தது எனவும், இது வெற்றி வாய்ப்பைத் தரப்போவதில்லை எனவும் தெரிவித்தே, அவர் போட்டியிலிருந்து விலகிக்கொண்டிருப்பதோடு, போல் மார்ட்டினை ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே லிபரல் கட்சியின் 171 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 135 பேரின் (79 வீதம்) நேரடி ஆதரவையும், 258 தொகுதிக் கிளைகளின் (86 வீதம்) ஆதரவையும், செனட் சபையில் 64 (99 வீதம்) உறுப்பினர்களின் ஆதரவையும் கொண்டுள்ள போல் மார்ட்டினின் ஆதரவு, எதிர்க்கட்சிகளின் மலினப் பிரசாரங்களையெல்லாம் முறியடித்து இன்னமும் வியாபித்துச் செல்கிறது.

சம்மேளனத்தின் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டதை நியாயப்படுத்தி, எதிர்க்கட்சியின் தாக்குதலிற்கு முகங்கொடுத்து வந்த போல் மாட்டினின் ஆதரவைக் குறைக்க, கனேடிய தமிழ்ச் சமுதாயத்தைப் பயன்படுத்த எடுத்த முயற்சியில் எதிர்த்தரப்பினர் முற்றாகத் தோற்றுப்போயினர்.

எமது சமுதாயத்திலும் 200,000 இற்கும் மேற்பட்டவர்கள் கனேடிய குடிமக்களாக மாறி, ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக எமது இனத்தை மாற்றியமைத்துள்ளனர். இந்நிலையில், இனியும் இவ்வாறான மலினப் பரப்புரைக்கான இனமாக நாம் இருக்கப் போவதில்லை என்பதையே குமரன் மூர்த்தியின் கடிதம் தெரிவித்து நிற்கிறது.

குமரன் மூர்த்தியின் பகிரங்க சவாலை ஒட்டாவா சிற்றிசன் ஏற்கிறதோ இல்லையோ, எம்மினத்தின் மீதான காழ்ப்புணர்வுப் பரப்புரைக்களிற்கான நியாயத்தை எடுத்து விளக்குகிற பணியில் நாம் தொடர்ந்து ஈடுபட்டேயாகவேண்டும். எது எப்படியிருப்பினும், கனடாவின் அடுத்த பிரதமர் போல் மார்ட்டின் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

# கறுப்பு ஜூலைக்குள் ஒரு கறுப்பு வெள்ளி

1983 ஆம் ஆண்டு இறுதி வாரம் கறுப்பு ஜூலை வாரமாகும். ஜூலை மாதம் 24 ஆம் திகதி பொறளை கனத்தை மயானத்தில் ஆரம்பமான கலவரம், கொழும்பு முழுவதையும் மயான பூமியாக்கியது. பேரினவாத காடையர்கள் - சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொண்டு, பௌதத பிக்குகளின் பூரண ஆசீர்வாதத்தோடு, நாடெங்கும் தமிழ்மக்கள் மீதான இனப் படுகொலைகளை விரிவுபடுத்தினர்.

ஜூலை மாதம் 29 ஆம் திகதி, கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவிவிட்டார்கள் என்ற வதந்தி, காற்று வேகத்தில் பரவியத்தைத் தொடர்ந்து - கொழும்பு நகரமே அல்லோல கல்லோலப்பட்டது.

1983 ஜூலை மாதம் 28 ஆம் திகதி, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்., தொலைக்காட்சியில் தோன்றி - சிங்கள மக்களின் இயல்பான உணர்வுகளே இக்கலவரம் என எடுத்துரைத்ததைத் தொடர்ந்து, பேரினவாத சக்திகளுக்கு ஏற்பட்ட வெறித்தனத்தால், அன்றைய தினம் கொழும்பு மாநகர எல்லைக்குள் 52 தமிழர்கள் கொல்லப்பட்டதாக, பொலிஸ் தலைமையகம் செய்தியொன்றை விடுத்தது.

இவர்களில் ஒருவர் மிகச்சிறந்த ஆய்வாளரும் கல்விமானுமான அருமைநாயகம். இன்னொருவர், கொட்டஞ்சேனையைச் சேர்ந்த வர்த்தகர் சங்கரசிவம் முதலாளி என்பவராவார். அன்றைய சம்பவத்திற்குக் காரணம் புறக்கோட்டை - நாலாம் குறுக்கு தெருவல ஒரு கடற்படை சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்து, அவர் அந்த இடத்தில் மாண்டு போனார் என்பதாகும்.

இன்னொரு சம்பவம் காஸ் வேக்ஸ் வீதியில் காடையர்கள் - ஒரு தமிழ்க்கடையை தாக்கமுயன்ற போது, பயத்தினால் அஞ்சிய தமிழ் இளம் கடைவேலையாட்கள் கூரையொன்றின் மீது ஏறி, ஓடுகளை கழற்றி - தாக்க வந்த காடையர்கள் மீது எறிந்தார்கள். இதைப் பார்த்தவர்கள், விடுதலைப் புலிகளின் நகர்ப்புற கெரில்லா அணி கொழும்பு நகருக்குள் தாக்குதல் நடத்துவதாகப் புரளியைக் கிளப்பி, பெரும் அனர்த்தங்களையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தினார்கள்.

**இனக்கலவரம் தந்த பாடம்**

பேரினவாதிகள் அன்று மூட்டிய தீயால் தலைநகரமே அழிந்தது. ஆனால், அது தமிழ்மக்கள் மத்தியில் விடுதலைத் தீயாக மூண்டெழுந்தது. தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தன்மைத் தாமே ஆளும் உரிமை போன்ற அடிப்படை அபிலாசைகளுக்கு தூண்டுகோலாயிற்று.

1983 ஜூலைவரை, தமிழர் போராட்ட சக்திகள், கெரில்லாப் போராட்ட சக்திகளாக ஒரு கரந்தடிப் படையாகவே கணிப்பீடு செய்யப்படடனர். ஆனால், கறுப்பு ஜூலையில் பேரினவாதம் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளால், தமிழர இளைஞர்படை ஒன்று பெரும் படையாக உருவாகியது. விடுதலைக்கான இராணுவக்கட்டமைப்பு உருவானது. இதனால், தமிழர் உரிமைப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக பரிணாமம் பெற்றது.

**தமிழகம் பின்தளமாயிற்று**

கியூபாவின் விடுதலைப் போராட்டத்தில், கியூபா போராளிகளுக்கு, மெக்சிகோ பின்தளமானதுபோல, தமிழ்ப் போராளிகளுக்கு தமிழகம் பின்தளமாயிற்று. இதனால், போராட்டம் வீச்சுப் பெறலாயிற்று. புவியியல் ரீதியாகக் கிடைத்த அனுகூலம் இந்தியா 1987 ஆம் ஆண்டு நேரடித் தலையீடு செய்ய வழிவகுத்தது. புவியியல் ரீதியான அனுகூலம் பின்னர் பிரதிகூலமாகப் போனமை துரதிர்ஷ்டமேயாகும்.

**1987 ஜூலை 29 இல் ஒரு ஒப்பந்தம்.**

தமிழர் போராட்ட வரலாற்றில், இரண்டாவது ஜூலை 29 சம்பவம் 1987 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆரும் இனப்பிரச்சினையை மையமாக வைத்து, ஒரு ஒப்பந்தத்தை எழுதினர். இந்த ஒப்பந்தம் எழுதப்பட்ட பின்னர் - 1983 ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் பற்றி தனது சுதுமலைப் பேச்சில் விடுதலைப் புலிகளின் தலைவர் உரையாற்றும்போது - "இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை எதிர்காலத்தில் விழுங்கிவிடும்" எனக் குறிப்பிட்டார். அவரது வார்த்தைகள் தீர்க்க தரிசனமாயிற்று. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. மாறாக, மேலும் சிக்கலாக்கியது. ஆனால், விடுதலைப் போராட்டம் பல பரிமாணங்களுடன் முனைப்புப் பெற்று இன்னும் கூர்மையடைந்துள்ளது. உறுதியான தளத்தில் தொடர்கின்றது.

**பொன்.பூலோகசிங்கம்**

# பக்தாத் மேம்பாலத்திலிருந்து குண்டுவீச்சு; இரண்டு அமெரிக்கப் படையினர் பலி!



தாக்குதல் நடைபெற்ற மேம்பாலம்.

பக்தாத்தில் நேற்று நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதலில், இரு அமெரிக்கப்படையினர் பலியாகினர். நகரின் மேம்பாலம் ஒன்றின் மீதிருந்து, பாலத்தின் கீழாகச் சென்றுகொண்டிருந்த இரண்டு அமெரிக்கப்படையினரின் ஹம்வீ துருப்புக்காவி வாகனம் மீது, கைக்குண்டு ஒன்று உள்ளே போடப்பட்டது என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இரண்டு அமெரிக்கப் படையினர் - வாகனத்திலிருந்து வெளியே வீசப்பட்டு, அசைவற்றுக் கிடந்ததைத் தாம் கண்டதாக அவர்கள் கூறினர்.

ஞாயிறன்று நகரில் அமெரிக்கப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், ஐந்து ஈராக்கியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற தாக்குதலாக இது உள்ளது.

அமெரிக்கப்படையினர் இருவர் இச்சம்பவத்தில் படுகாயமடைந்ததாகவும் - ஆனால், அவர்கள் இறக்கவில்லை எனவும், படையதிகாரி ஒருவர் தெரிவித்தார். நீர் பெறுவதற்காகச் சென்ற படையினர் திரும்பி வரும்போது, இத்தாக்குதல் நடந்ததாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். எனினும், காயமடைந்த இரு அமெரிக்கர்களும் பலியானதாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தின் முன் ஆசனத்திலிருந்தவர்கள் - ஆசனத்திலேயே சரிந்து கிடந்ததாகவும், இன்னொருவர் வீதியில் வீசப்பட்டுக் கிடந்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் தற்போது சதாம் ஆதரவாளர்களுக்கு, ஆதரவாக வெளிநாட்டுக் கூலிப்படையினரும் செயற்படுவதாக, ஈராக்கிலுள்ள தரைப்படைகளின் கட்டளையதிகாரி லெப்.ஜெனரல் சான்செஸ் தெரிவித்தார்.





பக்தாத்தில் நேற்றுக் கைக்குண்டு வீச்சுத் தாக்குதலுக்குள்ளான வாகனத்துக்கருகே செய்தியாளர்கள் செல்வதைத் தடுக்கும் அமெரிக்கப் படைவீரரை முதலாவது படத்திலும், அப்பகுதியில் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## பிலிப்பைன்ஸ் சதிமுயற்சி தொடர்பாக விசாரணைக் குழுக்கள் அமையும்

பிலிப்பைன்ஸில்- அண்மையில் அந்த நாட்டின் இராணுவத்தின் சிறு குழுவொன்று, மேற்கொண்ட சதி முயற்சி தொடர்பாக, விசாரணை நடத்த இரண்டு சுதந்திர ஆணைக் குழுக்கள் அமைக்கப்படுமென, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயோ அறிவித்துள்ளார்.

முறியடிக்கப்பட்ட இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாகச்செயற்பட்ட அரசியல் ஆதரவாளர்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென, அவர் நேற்று அறிவித்தார். முன்னதாக றோமன் கத்தோலிக்க ஆயர் ஒருவரும், முன்னாள் ஜனாதிபதி எஸ்ராடாவின் உதவியாளர் ஒருவரும் இதுதொடர்பாக, பொலிஸாரால் கைதாகியிருந்தனர்.

கடந்த ஞாயிறன்று மணிலாவில் உள்ள வர்த்தகத் தொகுதியொனறை, சுமார் 300 படையினர் கைப்பற்றினர். எனினும், சமரச முயற்சிகளைத் தொடர்ந்து அவர்கள் சரணடைந்தனர்.

தமது பணி நிலைமை மேம்படுத்தப்படவேண்டும் எனவும், அரசியல் ஊழல் களையவேண்டுமெனவும் இந்தக் கிளர்ச்சிப்படையினர் வேண்டுகோள் விடுத்தனர். அத்துடன் - ஜனாதிபதியையும், பாதுகாப்பு அமைச்சரையும் ராஜினாமா செய்யும்படியும் அவர்கள் கேட்டிருந்தனர்.

உலகவலம்

## லைபீரியத் தலைநகரின் மீது கிளர்ச்சியாளர் கடும் தாக்குதல்!

(மொன்ரோவியா)

லைபீரியக் கிளர்ச்சியாளர்கள்- தலைநகர் மொன்ரோவியா மீதான தமது தாக்குதலை, மீண்டும் தீவிரப் படுத்தியுள்ளனர். நேற்றுக் கடுஞ் சண்டை முக்கிய இரு பாலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் நடைபெற்றன.

இப்பாலங்கள் நகரின் மத்திய பகுதியிலிருந்து, கிட்டிய தூரத்திலேயே உள்ளன. கடந்த ஞாயிறன்று நடைபெற்ற கடும்போரில்- அரச படைகள், கிளர்ச்சியாளர் வசமிருந்த பழைய பாலப் பகுதியை மீண்டும் கைப்பற்றினர். இப்பாலம் தலைநகருக்கான ஒரு பாதையாக விளங்குகிறது.

இதேவேளை- தலைநகரில் மோசமடையும் உணவுததட்டுப்பாட்டினால், அங்குள்ளள மக்கள் பட்டினியை எதிர்நோக்கியபடி காணப்படுகின்றனர்.



தலைநகர் மீதான கடந்த ஒன்பது நாள் தாக்குதலில், நூற்றுக் கணக்கான பொதுமக்கள் பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கில் காயமடைந்துள்ளனர். ஷெல் தாக்குதல்களே பலரைப் பாதிப்பதாகக் கூறப்படுகிறது. நேற்று இருதரப்பும் சிறு ஆயுதங்கள் கொண்டு போரிட்டனர்.

இதனிடையே- லைபீரியாவை நோக்கி, அமெரிக்காவின் மூன்று போர்க்கப்பல்கள் சென்றுள்ளதாகவும் - எனினும், யுத்தநிறுத்தம் ஏற்படும் வரை படையினர் லைபீரியாவில் தரையிறங்கமாட்டார்கள் எனவும், அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார். இருதரப்பும் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், கிளர்ச்சிப்படைகள் 12 கிலோ மீற்றர் பின்நகர வேண்டும் என்றும் அமெரிக்கா விடுத்த கோரிக்கையை, கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர்.

நாம் கைப்பற்றிய பகுதிகளை- அமைதிப்படைகளிடம் ஒப்படைப் போமே தவிர, அரசபடைகளிடமல்ல என கிளர்ச்சிக்குழுவின் தலைவர் தெரிவித்தார். அமைதிப்படைகள் எப்போது வரும் என்று பார்க்கின்றோம். ஏனெனில், நாம் உயிரைக் கையில் வைத்திருக்கிறோம் என உள்ளூர் வாசி ஒருவர் தெரிவித்தார்.



தென்கொரியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்காவின் இரண்டாவது காலாற்படைப் பிரிவின் சிப்பாய் ஒருவர் மோட்டார் தாக்குதலுக்கு ஆயத்தமாவதைப் படத்தில் காணலாம்.

## இஸ்ரேல் – அமெரிக்கா உயர்மட்ட பேச்சு இன்று!

நூற்றுக்கணக்கான பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்கவுள்ளதான தனது அறிவிப்பைத் தொடர்ந்து- இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன், வொஷிங்ரனில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் பேச்சுக்களை நடத்தத் தயாராகிவருகின்றார். பேச்சுக்கள் இன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேச்சுக்களின்போது- பலஸ்தீனப் போராளிகளின் தாக்குதலைத் தடுப்பதற்காக, இஸ்ரேல் அமைத்துள்ள பாரிய தடுப்புச் சுவர் தொடர்பாகவும், ஆராயப்படவுள்ளது. இம்மதில் அமைப்புக்கு, அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே - தாம் விடுவிக்கவுள்ள 500 பலஸ்தீனக் கைதிகளில, 210 பேர் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் போராளி அமைப்புகளைச் சேர்ந்தோர் எனவும், மேலும் 210 பேர் அரபாத்தின் பா:.த்தா அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், 120 பேர் கிரிமினல் குற்றவாளிகள் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



ஷெரோன்

## பிரிட்டிஷ் விமானநிலையம் போராட்டத்துக்கு முஸ்தீபு

பிரிட்டன் விமான நிலையங்களில் - கோடை காலத்தில் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக- அங்கு பணியாற்றும் ஊழியர்கள், எச்சரித்ததைத் தொடர்ந்து விமானநிலையத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை, பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் தலைவர் ரொட் எடிங்ரன் சந்தித்துப் பேச்சுநடத்த முடிவு செய் துள்ளார். இச்சமரசப் பேச்சின் முடிவிலேயே, எதிர்காலம் தங்கியுள்ளதாக அவர் கூறினார்.

எனினும், பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் புதிதாக அறிமுகப்படுத்திய இயந்திரமூல வரவு நேரப்பதிவை, கைவிட்டால்தான் தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிடுவோம் என ஊழியர் சங்கங்கள் தெரிவித்தனர். ஊழியரின் நம்பிக்கையை, நிறுவனம் இழந்து விட்டது. அதை மீளப்பெறுவது அவர்களின் பொறுப்பு, என அவர்கள் கூறுகின்றனர்.



### சவுதி அரேபியப் பண்ணையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எண்மர் பலியென அறிவிப்பு!

சவுதி அரேபியப் பண்ணை ஒன்றில்- நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சமரில், ஆறு முஸ்லிம் தீவிரவாதிகளும், இரண்டு சவுதிப் பொலிசாரும் பலியானதாக- உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இச்சம்பவத்தில் மேலும் 8 பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

கடந்த மே மாதம் - ரியாட்டில் வெளிநாட்டவர் விடுதி மீது நடந்த பாரிய தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து சந்தேகத்திற்கிடமான முஸ்லிம் கிளர்ச்சியாளர்களை சவுதிப்படையினர் தேடிவருகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போருக்கு அனுப்புவதை விடுத்து அமைதிப் பணிக்கு அனுப்புங்கள்!

## பிரிட்டிஷ் அதிகாரி இலங்கை இராணுவத்துக்கு யோசனை

இலங்கை இராணுவத்தின் போரிடும் வல்லமையை உயர்த்துவதற்கு, பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரியின் ஆலோசனை பெறப்பட்டிருக்கிறது.

அரசு எதிர்பார்த்த ஆலோசனைகளுக்கு எதிர்மாறாக- மேற்படி பிரிட்டிஷ் அதிகாரி - புதிய ஆலோசனையையும், இலங்கை இராணுவம் குறித்த புதிய மதிப்பீடு ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார்.

அண்மைக்காலமாக, யுத்தத்துக்கான தயாரிப்புக்களில விடுதலைப் புலிகள் ஈடுபட்டுவருவதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து, அரசு - தனது இராணுவத்தினரது போரிடும் ஆற்றலை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகிறது.

இந்த நடவடிக்கைகளில் ஒரு கட்டமாகவே - இராணுவத்தினரது போரிடும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு, பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியின் ஆலோசனை பெறப்பட்டது.

எனினும், ஆலோசனை வழங்கிய பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் அங்கர் மொடிசி, இலங்கை அரசு சற்றும் எதிர்பாராத ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

தற்போதைய நிலையில் - இலங்கை இராணுவம் போரிடும் ஆற்றலைக் கணிசமாக இழந்துள்ளது என்றும், எனவே - இப்படையினரை யுத்தத்துக்குப் பயன்படுத்துவதைவிட, வெளிநாடுகளுக்கு அனுப்பி - அமைதிகாக்கும் படையாகக் கடமைக்கு அமர்த்தலாம் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

இந்த அதிகாரியின் மேற்படி ஆலோசனைகள் - இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் கடும் கண்டனத்துக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (01)





வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டு. மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற ஆடி ஆமாவாசைத் தீர்த்தத் திருவிழாவில் - சுவாமி வீதியுலா வருவதை முதற்படத்திலும், கலந்துகொண்ட பெருந்திரளான மக்களில் ஒரு பகுதியிரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அரசின் யோசனையினை ஆராய சர்வதேச சட்ட வல்லுனர்கள் குழு!

## விடுதலைப் புலிகள் நடவடிக்கை

(கொழும்பு)

அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை ஆராய்வதற்காக, விடுதலைப் புலிகள் சர்வதேச சட்டநிபுணர்களின் குழு ஒன்றை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக, கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சட்ட நிபுணர்கள் குழுவில்- இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்ட நிபுணர்கள சேர்க்கப்படவுள்ளனர். இவர்களது இணைப்பாளராக - விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகரும், நியூயோர்க்கில் வசிப்பவருமான விஸ்வநாதன் உருத்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தச் சட்ட ஆய்வுக் குழுவிற்கு - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பொறுப்பாகவிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக - இந்தக் குழுவினரின் கூட்டம் பெரும்பாலும் வெளிநாடு ஒன்றில் - குறிப்பாக நோர்வே, சுவிற்சலாந்து, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏதாவது ஒன்றில் நடைபெறுமெனத் தெரிகிறது. இந்தக் குழுவினர் - அரசு சமர்ப்பித்த திட்டவரைபில், விடுதலைப் புலிகள் சார்பில் இணைக்கப்படவேண்டிய யோசனைகள் குறித்து ஆராய்வர்.

விடுதலைப் புலிகள் அமைக்கவுள்ள சட்ட ஆய்வுக்குழுவில் - இலங்கையைச் சேர்ந்த மூன்று அல்லது நான்கு பேரும், ஏனைய நாடுகளிலிருந்து தலா ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். கொழும்பிலுள்ள மூத்த தமிழ் சட்ட விரிவுரையாளர் ஒருவர், இக்குழுவில் இடம்பெறவுள்ளார். மேலும் மூன்று இலங்கையர்களில் - இரு சிங்களவர்களையும் இணைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களைவிட- மலேஷியாவில் உள்ள ஓர் இந்திய அரசியல் அறிவியலாளர், சிங்கப்பூரிலுள்ள ஓர் இலங்கையர், பிரிட்டன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒவ்வொரு தமிழரும், அமெரிக்காவிலிருந்து இரு வெள்ளையின சட்ட நிபுணர்களும், கனடா நாட்டவர் ஒருவரும் இக்குழுவில் இணைகக்கப்படுவதற்காக, விடுதலைப் புலிகளால் அழைப்பு விடப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும், சட்ட ஆலோசகர் உருததிரகுமாரும் தனித்தனியாக விஜயங்களை மேற்கொண்டு, இந்த சட்ட ஆய்வாளர்களைச் சந்தித்து அவர்களது யோசனைகளைப் பெற்றுக் கொள்வர் எனவும்,

இந்த நடவடிக்கையில் - அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேரடியாக பங்குபற்றாவிடினும், நிலைமைகள் குறித்து அவருக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படும். தமிழ்ச் செல்வனும், உருத்திரகுமாரும் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேசி, புலிகளின் அதிகார பூர்வ முடிவை இறுதியில் அறிவிப்பர் எனவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# எமது யோசனைகளை ஏற்றால்...

தைப் பராமரித்துக்கொண்டே, சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்துள்ளோம். இதனை அரசாங்கம் புரிந்துகொண்டு பிரச்சினைகளுக்குச் சமாதான முறையில் தீர்வுகாண முன்வநதால் அதனை மகிழ்வோடு வரவேற்கிறோம்.

தென்தமிழீழத்திற்கு வரவேண்டுமெனப் பல தடவைகள் முயற்சித்தும இரண்டொரு தினங்கஞக்கு முன்னர் தான் தேசியத் தலைவரிடமிருந்து இங்குவரப் பணிப்புக் கிடைத்தது.

எமது வரலாற்றில் ஒவ்வொரு காலங்களிலும் - தென் தமிழீழம் கொடுத்த விலை அதிகம். நாம் பலமாக இருந்தால்தான் தென் தமிழீழம் எமது தேசமாக தமிழர்கள் கையில் இருக்கும். இதனை இளைய தலைமுறை உணர்ந்துகொள்ளவேண்டும்.

தலைவரின் நம்பிக்கையைக் கருணா அம்மான் இங்கு நிறைவேற்றி வருவதை, தலைவர் நேரடியாக வந்து பார்த்தால் - நிச்சயம் மகிழ்வார். இதில் சந்தேகமில்லை.

இங்குள்ள படையணிகளைப் பார்க்கின்றபோது, எமது பலத்தை நோக்குகின்ற பொழுது, எமது அரசியல் உரிமைகளை தமிழ் மக்களுடைய ஏக்கங்களை, கனவுகளை வாழ்வு நிலைகள் வளப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை என் பதை சாட்சியம் கூறி நிற்கிறது.

நாம் பலமாக இருக்கின்ற போதே எமது உரிமைக்குரல் அவர்களுடைய காதில் உறுத்தலாக ஒலிக்கும்.

தமிழர் தேசம் இன்று ஒன்றுபட்டு நிற்கிறது. முன்னைய காலத்தில் எம்மைப் பிரிக்க எதிரிகள் பல சூழ்ச்சிகளைச் செய்தனர். பிரதேச ரீதியாக, மத ரீதியாக, ஏனைய பல வழிகளுடாக - எங்களைப் பிரித்து சிதைத்துக் கலைத்ததை முன்னைய அரசியல் வரலாறுகளில் காணலாம். எமது தலைவரின் போராட்ட வரலாற்றில் - தமிழர்தேசம் இன்று ஒன்றுபட்டு நிற்கிறது. இதனை அசைக்க யாராலும் முடியாது.

இது எதிரிக்கு பலத்த சவாலாகும். வன்னிப் போர்முனையில் தென் தமிழீழப் போராளிகள் களப்பலியானபோது, அதனை வேறுவிதமாகப் பிரசாரம் செய்தார்கள். சிங்கள இராணுவம் படையெடுத்தபோது, தமிழர் தேசப்படைகள் ஒன்றுபட்டு எமது தேசியப் பலத்தை வெளிப்படுத்தினோம். தென்தமிழீழப் படைகள் வன்னி வந்து அரச படைக்கு ஏற்படுத்திய இழப்பின் காரணமாகவே, கிழக்கிலிருந்து படைகள் வாபஸ் பெறப்பட்டன. எம்மை அழிக்க முற்பட்டால், தாமே அழிவோமென்ற உண்மையைச் சிங்களப் படையினர் உணர்நதனர். இதில் - கேணல் கருணா அம்மான் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை தளபதிகள், போராளிகள் ஆற்றிய பங்கு அளப்பரியது. இதனை, எப்போதும் தலைவர் நினைவுகூர்ந்து வருகிறார்.

நாம், தமிழீழத்தில் பெரியளவு பிரதேசத்தை வைத்துக்கொண்டு தமிழர் இறைமையை பாதுகாத்து வருகிறோம்.

எமது போராளிகளின் உறுதியும், எமது பலத்தின் காரணமுமாகவே நாம் பேச்சுவார்த்தைகளில் தலைநிமிர்ந்து பங்குபற்றுகிறோம். எமது தலைவர் கூறுவார்- பலத்தின் அடிப்படையில்தான் எதுவும் தீர்மானிக்கப்படுகிறதென்று. முன்னர்- எமது தலைவர்கள், பல தடவைகள் பேசி ஒப்பந்தங்களைச் செய்தார்கள்.

நாமும் பல யுத்த நிறுத்தங்களையும் பேச்சுவார்த்தைகளையும் சந்தித்துள்ளோம். ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் - பலத்தின் முன்னால் நின்று, பின்புலத்தில் எங்கள் படைபலம் கட்டி எழுப்பப்பட்டு, நாம் ஏமாற்றப்பட்டால், எம்மீது போர் திணிக்கப்பட்டால், எம்மீது ஆக்கிரமிப்பு தொடரப்பட்டால், எம்மை அடிமைப்படுத்த முற்பட்டால் - அதனை எதிர்த்து நின்று பாதுகாப்பதற்கு, முறியடிப்பதற்கு எமது படைபலம் எமக்குப் பின்னால் இருக்கிறது. இந்த நிலையில் இருந்து கொண்டுதான் நாம் பேசுகிறோம்.

நாம் விட்டுக்கொடுப்புக்களை செய்ததாக கூறுகின்றார்கள். புலிகள் எதனையும் விட்டுக்கொடுக்கவில்லை. எமது இனம் பல கட்டங்களில் ஏமாற்றப்பட்டது. போலி ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் அனைத்துமே எம்மைப் பலவீனப்படுத்த் எடுத்த முயற்சியே தவிர, வாழவைப்பதற்காக அல்ல.

சிங்களப் பேரினவாதம் எமக்கு எதையும் தரப்போவதில்லை என்பது எமக்குத் தெரியும். இன்று உள்ள சூழ்நிலை வேறு. சர்வதேச சமூகம் நீதியான தீர்வுகாணுமாறும், அப்போது தான் புனர்நிர்மாண உதவிகளை வழங்கமுடியும் எனவும் தெரிவித்தது.

இதனாலேயே நியாயமான நிலைப்பாட்டை இலங்கை அரசு எடுக்காவிட்டால், ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை, தலைவர் அறிவித்தார்.

ரோக்கியோ மாநாட்டில் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைச் சிங்கள மக்கள், சிங்கள தேசம் ஏற்றால்தான் உதவிகளை வழங்கமுடியுமென உலகநாடுகள் அறிவித்துள்ளன. இந்த அடிப்படையிலேயே- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாகசபை வரைபை அனுப்பியுள்ளார். அதில் பல குறைபாடுகள் உள்ளன. மக்களுடைய எதிர்பார்ப்புக்களை அது முழுமையாக நிறைவு செய்யவில்லை.

நாம் யுத்தவெறியர்களல்ல. நாம் படைபலத்தைக் கட்டியெழுப்பியிருப்பது - எமது தேசத்தின் பாதுகாப்பிற்காக. எம்மை நாம் தற்காத்துக் கொள்வதற்காக. எம்மைப் பலப்படுத்துவதை மீண்டும் போருக்கான ஆயத்தங்களாகக் கருதி, அதற்கான நடவடிக்கைகளை சிங்களதேசம் எடுக்கவேண்டிய தேவையில்லை.

நாம் எப்போதும் பலமாக இருப்போம். எமது பலத்தின் அடிப்படையில் தான் எதுவுமே அமையும். நாம் பலமும், உறுதியும் கொண்டவர்களாக இருப்பதால்தான் பேச்சுவார்த்தைக்கு கௌரவமாக அழைக்கப்பட்டுள்ளோம். தமிழீழ மக்களின்- தமிழர்தேசப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம்.

சந்திரிகாவின் பிரசாரத்தால் எம்மைப் பயங்கரவாதிகளாகப் பார்த்த உலகம், இன்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எம்மைப்பார்க்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர் விளையாட்டு விழாவில்...

இவற்றிலிருந்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாகிய யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் - யாழ். மத்திய கல்லூரி வெற்றியீட்டி, வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

கிரிக்கெட் இறுதிப்போட்டி நடைபெறுவதற்கு முன்னர், நட்பு ரீதியான போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போட்டியில் சர்வதேச அணிகளாகிய - பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவு, இங்கிலாந்து அகிய அணிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 7 வீரர்களுக்கும், கனடாவின் தேசிய கிரிக்கெட் அணியில் விளையாடிக் கொண்டிருக்கும் - ஈழத்தவரான துஷ்யந்தன் சஞ்சீவ் தலைமையில் களம் புகுந்த தமிழீழ அணியினருக்கும் இடையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய சர்வதேச அணி 4 விக்கட் இழப்புக்கு 76 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தமிழீழ அணியினர் - 10 ஆவது ஓவரில் சகல விக்கெட்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவிக்கொண்டனர். இப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் றமீஸ் ராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

இறுதியாக வெற்றிபெற்ற அணிகளுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும பரிசில்களையும் கேடயங்களையும் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் வழங்கினார்.

**பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை**

**பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

**குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத்துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.**

**இன்று (29.07.03) காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.**

**நிர்வாக இயக்குநர்**
**நமது ஈழநாடு**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.